இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்டி எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust

KDK SINCE 1909 JAPAN

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm



# தமிழன்
THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 230 சோபகிருது வருடம், சித்திரை மாதம் 28ஆம் திகதி வியாழக்கிழமை (11.05.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 20, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50



Special offer
2023 மே 1 தொடக்கம் மே 31 வரை

KDK SINCE 1909 JAPAN

DISCOUNT 15% (On selected models only)
Cash or Card
*Conditions apply

Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472


# ரணிலால் எம்மை ஏமாற்ற முடியாது!

## தமிழருக்கு தீர்வை வழங்காவிடின் அடுத்த ஜனாதிபதி பதவி கனவில் முடியும் என்கிறார் சாணக்கியன்



நமது நிருபர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் தம்மையும் மக்களையும் ஏமாற்ற முடியாதெனக் குறிப்பிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், வடக்கு, கிழக்கில் தமிழர்களுக்கு அரசியல் தீர்வொன்றை ஜனாதிபதி தமது பதவிக்காலத்தில் வழங்காதபட்சத்தில் அவர் ஒருபோதும் அடுத்த ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படமாட்டாரென சபையில் நேற்று (10) தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான விவாதம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோது அது தொடர்பில் உரையாற்றிய சாணக்கியன் எம்.பி., தமிழ்க் கட்சிகளுடனான ஜனாதிபதியின் கலந்துரையாடல் தொடர்பிலும் கருத்துரைத்தார்.

இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மை தொடர்ச்சியாக கலந்துரையாடலுக்கு அழைப்புவிடுத்து வருகிறார். அவர் ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகிறாரோ தெரியவில்லை.

02 பக்கம்



இனப்படுகொலையை நினைவுகூர்ந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக நேற்று (10) இடம்பெற்றது. இதன்போது போக்குவரத்து பொலிஸாரும் கஞ்சியைப் பெற்று அருந்தினர். (படப்பிடிப்பு: வன்னி செய்தியாளர்)

# கப்பல் விவகாரத்தால் சபை ஒத்திவைப்பு

## அமைச்சர் விஜயதாசவின் எதிர்ப்பையடுத்து அவசரமாகக் கூடிய கட்சித் தலைவர்கள்

நமது நிருபர்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் பாராளுமன்றத்தில் நேற்று (10) ஆரம்பமாகவிருந்த நிலையில் நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டதால் சபை நடவடிக்கைகளை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஒத்திவைத்தார்.

இலங்கை கடற்பரப்பில் தீப்பரவல் ஏற்பட்டு விபத்துக்குள்ளான எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் நீதிமன்ற வழக்கு இடம்பெற்றுவரும் நிலையில், பாராளுமன்றத்தில் விவாதிப்பதால்...

02 பக்கம்

# கப்பல் விடயத்தில் சதி இடம்பெற்றுள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் மூலம் நமது கடற்பரப்பில் அதிகளவு இரசாயனங்கள் கலந்ததால் சுற்றுச்சூழலுக்கும் மீனவர்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டதாகவும் அதற்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில்...

02 பக்கம்

## களுத்துறை மாணவி உயிரிழந்த விவகாரம்

# சந்தேகநபரை தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

களுத்துறை விடுதி ஒன்றின் மாடியில் இருந்து விழுந்து பாடசாலை மாணவி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட பிரதான சந்தேகநபரான 29 வயதுடைய நபரை 48 மணித்தியாலங்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய பொலிஸாருக்கு களுத்துறை நீதவான் நீதிமன்றம் நேற்று (10) அனுமதி வழங்கியது.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

சாணக்கியன் எம்.பி கொஞ்சம் சாணக்கியமா பேசோணும்... நம்பிக்கையில்லை எண்டா ஏனுங்கோ நேரம் மினக்கெட்டு ரணிலை சந்திக்கோணும்...!



# ஊழலை மறைப்பதற்கு முயற்சிக்க மாட்டோம்

## எக்ஸ்பிரஸ் பேர்ள் தொடர்பில் அமைச்சர் பிரசன்ன சுட்டிக்காட்டு



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் குறித்து இன்னும் துல்லியமாக ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டதாகவும் ஊழலை மூடிமறைக்க முயற்சிக்கவில்லையென்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் நேற்று (10) தெரிவித்தார்.

இலங்கை கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்...

02 பக்கம்

# 16 மாணவியர் மீது பாலியல் குற்றம்

## களுத்துறையில் தலைமறைவான ஆசிரியரை தேடுகிறது பொலிஸ்

நா. தினுஷா

களுத்துறை பிரதேசத்தில் பிரத்தியேக வகுப்புகளில் கல்வி கற்கும் 16 வரையான மாணவியரை துஷ்பிரயோகப்படுத்தியதாக கூறப்படும் தனியார் வகுப்பு ஆசிரியர் அந்தப் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார், அந்த நபரைக் கைதுசெய்வதற்கு தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

02 பக்கம்

## உஷ்



வடக்கு, கிழக்கு தமிழ் எம்.பி மாருடன் நடத்தும் பேச்சு தொடர்பில் தங்களுக்கு முன்கூட்டியே ஜனாதிபதி ரணில் எதுவும் தெரிவிக்கவில்லையென்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட பிரமுகர்கள் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் முறையிட்டுள்ளனராம். வடக்கு, கிழக்கில் தமிழர் பிரச்சினைகளை பற்றி பேசும்போது தென்னிலங்கையில் அது பல்வேறு கருத்துருவங்களை ஏற்படுத்துமென்பதால் இந்த சந்திப்புகள் தொடர்பில் நேரடியாக ஜனாதிபதியிடம் கேட்டறிய பொதுஜன பெரமுன முடிவு செய்துள்ளதாம்.

# உணவுப் பிரச்சினையில் மூன்றிலொரு பகுதியினர்

## உலக உணவுத்திட்டம் அறிக்கை

இலங்கை சனத்தொகையில் மூன்றிலொரு பகுதியினர் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்டத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கடந்த 2022ஆம் ஆண்டு கடுமையான பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் 63 இலட்சம் பேர் உணவு, எரிபொருள் மற்றும் பிற அத்தியாவசிய...

02 பக்கம்

# ஐ.எம்.எவ். குழு இன்று வருகை

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு இன்று (11) நாட்டுக்கு வருகைதரவுள்ளது. இவர்கள் எதிர்வரும் 23ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருந்து பல்வேறுகட்ட கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளனர்.

இலங்கைக்கு சர்வதேச கடன்வழங்குநர்களின் ஆலோசனைகளை மீளாய்வு செய்யும் விதமாக சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளின் வருகை அமையவுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய பணிப்பாளர் கிருஷ்ணா...

02 பக்கம்

# ரணிலுடன் தமிழ்க் கட்சிகள் இன்றும் நாளையும் பேச்சு

இனப் பிரச்சினைக்கான தீர்வு, நல்லிணக்கம், அதிகாரப் பகிர்வு தொடர்பில் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும்...

02 பக்கம்

# தப்புலவின் கைதை தடுக்க தடை உத்தரவு

## ஜூன் 22ஆம் திகதிவரை நீடிப்பு

முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவை கைதுசெய்வதற்கும் வாக்குமூலம் பதிவு செய்வதற்கும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த...

02 பக்கம்

# டெங்கை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை

## மாகாண பிரதம செயலாளர்களுக்கு ஜனாதிபதியின் செயலர் அறிவுறுத்தல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம், டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும்...

02 பக்கம்

## டெங்கை கட்டுப்படுத்த...

மேற்கொள்ளுமாறு, அனைத்து மாகாண செயலாளர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க எழுத்துமூலம் நேற்று முன்தினம் (09) அறிவித்துள்ளார்.

டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின் தேவைக்கு ஏற்ப பிரதம செயலாளர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு பொலிஸாருக்கும் முப்படைக்கும் ஜனாதிபதியின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் கடந்த வாரத்தில் ஆயிரத்து 896 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், மேல் மாகாணத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அது 49 வீதமாகும்.

மேல் மாகாணத்தில் டெங்கு நோயாளர்களில் 21 வீதம் கம்பஹா மாவட்டத்திலும் 18 வீதம் கொழும்பு மாவட்டத்திலும் 7 வீதம் களுத்துறை மாவட்டத்திலும் பதிவாகியுள்ளது. அவற்றில் 3.4வீதம் டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாநகர சபை பிரதேசத்தில் மாத்திரம் பதிவாகியுள்ளனர்.

இது தவிர, திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, காலி மற்றும் கேகாலை மாவட்டங்களில் இருந்தும் அதிகமான நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நோயாளிகளின் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளது.

மேல் மாகாணத்தில் கடந்த வாரம் விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன், டெங்கு நோயாளர்கள் அதிகம் பதிவாகும் கம்பஹா போன்ற மாவட்டங்களில் துரித டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் கொழும்பு மாவட்டத்தில் 6ஆயிரத்து 678 டெங்கு நோயாளர்களும், கம்பஹா மாவட்டத்தில் 7ஆயிரத்து 166 டெங்கு நோயாளர்களும் களுத்துறை மாவட்டத்தில் ஆயிரத்து 902 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளதோடு மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ள மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 15ஆயிரத்து 746 ஆகும்.

அநுராதபுரம் மாவட்டத்தில் 209 டெங்கு நோயாளர்கள் மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தில் 155 டெங்கு நோயாளர்களுமாக வட மத்திய மாகாணத்தில் இந்த வருடம் 364 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் ஆயிரத்து 481 டெங்கு நோயாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 503 டெங்கு நோயாளர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 57 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளதோடு மத்திய மாகாணத்தில் இந்த ஆண்டு பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2ஆயிரத்து 401 ஆகும். டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆக உள்ளது.

பதுளை மாவட்டத்தில் 445 டெங்கு நோயாளர்களும் மொனராகலை மாவட்டத்தில் 111 டெங்கு நோயாளர்களுமாக ஊவா மாகாணத்தில் 556 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இங்கு ஒரு மரணம் பதிவாகியுள்ளது.

2023ஆம் ஆண்டில் சப்ரகமுவ மாகாணத்தில் ஆயிரத்து 878 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இரத்தினபுரி மாவட்டத்தில் 708 டெங்கு நோயாளர்களும் ஒரு மரணமும் பதிவாகியுள்ளதுடன் கேகாலை மாவட்டத்தில் ஆயிரத்து 170 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இங்கு இறப்புகள் பதிவாகவில்லை.

இந்த வருடம் வடமேற்கு மாகாணத்தில் 3ஆயிரத்து 458 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதோடு குருநாகல் மாவட்டத்தில் ஆயிரத்து69 டெங்கு நோயாளர்களும் புத்தளம் மாவட்டத்தில் 2ஆயிரத்து 389 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர். வடமேல் மாகாணத்தில் டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆகும்.

இந்த வருடம் தென் மாகாணத்தில் ஆயிரத்து 966 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். காலி மாவட்டத்தில் 918 டெங்கு நோயாளர்களும் மாத்தறையில் 536 டெங்கு நோயாளர்களும் ஹம்பாந்தோட்டையில் 512 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர். தென் மாகாணத்தில் 03 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் 108 டெங்கு நோயாளர்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 106 டெங்கு நோயாளர்களும் அம்பாறை மாவட்டத்தில் 55 டெங்கு நோயாளர்களுமாக கிழக்கு மாகாணத்தில் 269 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் இதுவரை 03 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

வடமாகாணத்தில் ஆயிரத்து 326 டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளதோடு யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரத்து 121 டெங்கு நோயாளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 51 பேரும் மன்னார் மாவட்டத்தில் 27 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 33 பேரும் வவுனியா மாவட்டத்தில் 94 பேரும் பதிவாகியுள்ளனர். வடமாகாணத்தில் இதுவரை 02 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

தற்போது, டெங்கு வைரஸின் 2 மற்றும் 3ஆம் திரிபுகள் அதிகளவில் பதிவாகியுள்ளன. மேலும் 14 வருடங்களின் பின்னர் டெங்கு வைரஸ் 3ஆவது திரிபு பரவுகிறது. டெங்கு நோய்க்கான நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளதால், டெங்கு நோய் பரவும் வாய்ப்பும் அதிகரித்துள்ளதாக சுகாதாரத்துறையினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் அதன் கீழ் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பன நோய் தடுப்புக்காக பொது சுகாதாரப் பரிசோதகரின் மேற்பார்வையின் கீழ் விரிவான வேலைத்திட்டத்தை ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளதாக மாகாண பிரதம செயலாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதன்படி, டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களை அடையாளங் கண்டு துப்புரவு செய்யும் பணிகள் தொடர்பில் அரசு நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் தலைவர்களை அறிவூட்டுதல், நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் உள்ள அனைத்து வீடுகள் மற்றும் கடைகளை பரிசோதனைக்குட்படுத்துதல், ஒலிபெருக்கிமூலம் அறிவூட்டுதல், டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்ட பகுதிகளின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் டெங்கு நுளம்பு குடம்பிகளை அழித்தல், வீடுகள் மற்றும் நிறுவனங்களை அண்டிய பகுதிகளை சுத்தமாக வைத்திருக்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் என்பனமூலம் டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மாகாண பிரதம செயலாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இதனிடையே டெங்கு ஒழிப்புத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு சுகாதாரத்துறைகளின் தலையீடு மட்டும் போதாது என்றும் அதற்கு பொது மக்களின் ஆதரவும் தேவை என்றும் சுகாதாரத் துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

## ஊழலை...

தொடர்பில் அரசாங்கம் பல்வேறு தகவல்களை மூடி மறைக்க முயற்சிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பாராளுமன்றத்தில் குற்றஞ்சுமத்தினார். இதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் பிரசன்ன இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இது தொடர்பாக மூன்று அல்லது நான்கு அமைச்சரவை பத்திரங்களை முன்வைத்துள்ளோம். எனக்கு முன்னர் பணியாற்றிய அமைச்சர்களான அலி சப்ரி மற்றும் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் இது தொடர்பில் அமைச்சரவையில் விரிவாக கலந்துரையாடியுள்ளனர்.

அதன்படி, சிங்கப்பூர் நிறுவனம் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. நாங்கள் நீதித்துறை மற்றும் சட்ட வல்லுநர்கள் அல்ல. சட்டமா அதிபர் திணைக்களம் அதனைக் கையாள முடியும். அத்துடன், இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமித்தோம். அதனால்தான் இரண்டு நாட்கள் இதைப் பற்றி விவாதிக்க ஒப்புக்கொண்டோம். அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் ஒருபோதும் திருட்டையோ ஊழல்களையோ மூடி மறைக்க முயற்சிக்க மாட்டோம் என்றார்.

## உணவுப்...

பொருட்களின் கடும் தட்டுப்பாடு காரணமாக உணவுப் பாதுகாப்பற்ற நிலைமையை எதிர்நோக்கியுள்ளதாக உலக உணவுத்திட்டம் மேலும் தெரிவித்துள்ளது. 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் 2022ஆம் ஆண்டு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை நாடு எதிர்கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 2019ஆம் ஆண்டு இலங்கையின் உணவுப்பாதுகாப்பின்மையானது 10 வீதமாக காணப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரணிலுடன்...

இடையே ஜனாதிபதி செயலகத்தில் இன்று பேச்சுவார்த்தை ஆரம்பமாகவுள்ளது.

இந்த விசேட சந்திப்பு இன்று மாலை 05 மணிக்கு இடம்பெறவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான கலந்துரையாடல் மற்றும் அதற்கான நிகழ்ச்சி நிரல் குறித்து இலங்கை தமிழரசுக் கட்சி நேற்றுமுன்தினம் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியிருந்தது. வடக்கு மாகாண தமிழ் எம்.பிக்கள் மாத்திரமல்லாமல் கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் எம்.பிக்களையும் கலந்துரையாடலுக்கு அழைக்க வேண்டுமென இதன்போது ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சாதகமான பதிலை வழங்கியுள்ள நிலையில் இன்றும் நாளையும் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

நல்லிணக்கம் மற்றும் உடனடி பிரச்சினைகள் தொடர்பில் இன்றைய தினம் ஆராய்வதற்கும் அதிகாரப்பகிர்வு பற்றி நாளைய தினம் பேசுவதற்கும் ஜனாதிபதியுடனான சந்திப்பில் இணக்கம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.எம்.எவ். குழு...

ஸ்ரீநிவாசனும் இலங்கைக்கு வருகைதரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் சகல கடன் வழங்குநர்களும் பங்கேற்ற கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (09) நடைபெற்றது.

கண்காணிப்பின் அடிப்படையில் சீனா இந்த கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளது.

ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இணையவழியில் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளன. இலங்கையின் அனைத்து கடன் வழங்குநர்களும் தனித்தனியான கலந்துரையாடல்களை நடத்துவதற்கு பதிலாக பொதுவான தளத்தை உருவாக்குவதே இந்த கலந்துரையாடலின் நோக்கமாகும்.

இரு தரப்பு கடன் வழங்குநர்களுக்கு 7.1 பில்லியன் டொலரையும் சீனாவுக்கு 3 பில்லியன் டொலரையும் இந்தியாவுக்கு 1.6 பில்லியன் அமெரிக்க டொலரையும் பாரிஸ் கிளப்பிற்கு 2.4 பில்லியன் டொலரையும் இலங்கை கடனாக செலுத்த வேண்டியுள்ளது.

12 பில்லியன் டொலர்களுக்கு அதிகமான யூரோ பிணைமுறிகள் மற்றும் 2.7 பில்லியன் டொலர் பெறுமதியான வணிகக் கடன்கள் தொடர்பில் மீண்டும் பேசும் நோக்குடன் இலங்கை அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ள பின்புலத்திலேயே இந்த கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## தப்புலவின்...

தடை உத்தரவு எதிர்வரும் ஜூன் 22ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. துப்புல டி லிவேராவால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு நீதிபதிகளான நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் எம்.ஏ.ஆர். மரிக்கார் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் தாம் வழங்கிய வாக்குமூலத்தை விசாரணை செய்வதற்கும் வாங்குமூலத்தைப் பதிவு செய்வதற்கும் பயங்கரவாத தடுப்புப் பிரிவு தன்னை அழைத்துள்ளதாக முன்னாள் சட்டமா அதிபர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இது சட்டமா அதிபரின் சிறப்புரிமையை மீறுவதாகவும் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பிரதிவாதிகளுடன் கலந்தாலோசிப்பது அவசியம் எனவும் அதற்கு சுமார் ஒருமாதகால அவகாசம் தேவை எனவும் நீதிமன்றில் முன்னிலையாகிய மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்க தெரிவித்தார்.

மனுதாரரின் கோரிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்கப்படாததால் எதிர்வரும் 22ஆம் திகதிவரை வழக்கை ஒத்திவைக்க நீதிமன்றம் தீர்மானித்தது.

## ரணிலால்...

அல்லது எங்களது ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து பயணிப்பதாகவும் தமிழர்களின் பிரச்சினையை தீர்க்க முயற்சிப்பதாகவும் சர்வதேசத்துக்கு காட்ட முயற்சிக்கிறாரோ தெரியவில்லை.

ஜனாதிபதி நாளையும் நாளை மறுதினமும் (இன்றும் நாளையும்) எம்மை கலந்துரையாடலுக்காக அழைத்துள்ளார். இது வெறும் பேச்சுவார்த்தைக்குள் மாத்திரம் அடங்குமானால் ஜனாதிபதிக்கு மீண்டும் ஜனாதிபதியாக முடியாதென்பதை அவர் நினைவிற்கொள்ள வேண்டும்.

தமிழர்களின் வாக்குகளால் மாத்திரம் அவர் ஜனாதிபதியாவார் என்று நான் கூறவில்லை. இந்த நாட்டுக்கும் நாட்டுப் பொருளாதாரத்துக்கும் எதிர்காலம் இல்லையென்பதையே கூறுகிறேன். சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக மாத்திரமே இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியுமென அவர் நினைப்பாரானால் அது ஒருபோதும் நடக்காது. அவர் அதனை நன்கறிவார்.

நாட்டுக்கு பெரும் எண்ணிக்கையிலான முதலீடுகளை எங்களால் கொண்டுவர முடியும். காணி உரிமை அவ்வந்த இடங்களிலுள்ள மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். இது தொடர்பில் நாம் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவோம்.

ஜனாதிபதியுடன் நாம் கடந்த காலங்களில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளோம். எனக்குத் தெரிந்தவகையில் எமது தலைவர் இரா.சம்பந்தன் சுமார் 50, 60 ஆண்டுகளாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறார். இப்போது இந்தப் பிரச்சினை தீரும் என்ற நம்பிக்கையுடனே அவர் கலந்துகொள்கிறார்.

ஆனாலும், அந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. நாம் இன்னும் எமது கோரிக்கைகளை கைவிடவில்லை.

நாம் ஜனாதிபதிக்கு ஒரு விடயத்தை கூறிக்கொள்ள விரும்புகிறோம். இந்தக் கலந்துரையாடலையாவது சரியான முறையில் ஆரம்பித்து சரியான முறையில் நிறைவுசெய்யுங்கள். அதன் முடிவில் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு வேண்டும்.

அவ்வாறான அரசியல் தீர்வொன்றை அவரது பதவிக்காலத்தில் வழங்காமல் தேர்தல் ஒன்றுக்குச் செல்லும்வரை எம்மை பயன்படுத்தி காலத்தை இழுத்தடிப்பதற்கு எண்ணுவாரானால் நாம் மடையர்களல்ல, நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் வடக்கு, கிழக்கு மக்களும் மடையர்களல்ல என்பதைக் கூறிக்கொள்கிறேன். இதை மிகத் தெளிவாக ஜனாதிபதிக்கு கூறுகிறேன்.

ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தமிழ்க் கட்சிகளும் கட்டாயம் பங்குபற்ற வேண்டும். தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே அவர்கள் எங்களுக்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்றார்.

## 16 மாணவியர்...

மேலும், 16 பேர் இவ்வாறு துஷ்பிரயோகப் படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டாலும், இதுவரையில் பொலிஸ் நிலையத்தில் இரண்டு முறைப்பாடுகளே பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளை தொடர்ந்து மேலும் சில முறைப்பாடுகள் கிடைக்கப்பெறலாம் என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ நேற்று (10) ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

பாடசாலை வகுப்பறையில் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குறிப்பிடப்படும் குறித்த ஆசிரியர், மாணவிகளை வீடுகளில் இறக்கிவிடும் நோக்கில் களுத்துறை லாகொஸ்வத்த பிரதேசத்தில் காட்டுப்பகுதியொன்றுக்கு அழைத்துச் சென்று அவரின் காரில் வைத்து துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளதாகவும் அதனை தொலைபேசியில் பதிவு செய்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மாணவியருக்கு 'சூம்' தொழில்நுட்பத்தினூடாக கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் சந்தர்ப்பத்தில் மாணவிகளின் ஆடைகளை நீக்குமாறுகோரி அதனை பதிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபரான ஆசிரியர் அந்தக் காட்சிகளை அவரின் மடிக்கணினியில் சேகரித்து வைத்திருந்த நிலையில் அவற்றை அவரின் மனைவி அவதானித்துள்ளதுடன் அதுதொடர்பில் சம்பந்தப்பட்ட மாணவிகளின் பெற்றோருக்கு அறிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து முறைப்பாடு செய்யும் செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன.

துஷ்பிரயோகத்துக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளவர்களில் பொலிஸ் அதிகாரியொருவரின் மகளும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ மேலும் தெரிவிக்கையில்,

இந்தச் சம்பவம் 2022ஆம் ஆண்டு இடம்பெற்றதாகவே பொலிஸ் முறைப்பாடு கிடைத்துள்ளது. கடந்த வருடம் இடம்பெற்றிருந்தாலும் கடந்த சில தினங்களிலேயே இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பில் சில தினங்களுக்கு முன்னரே பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்திருந்தது. களுத்துறை சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்பு பிரிவினர் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடை சந்தேகநபர் அந்தப் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார். அவரை கைதுசெய்வதற்காக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

இலத்திரனியல் உபகரணங்களில் 'சூம்' தொழில்நுட்பத்தின் ஊடாக பல்வேறு கற்றல் நடவடிக்கைகளுக்கான பிரத்தியேக வகுப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக கொரோனா தொற்றுப் பரவலின் பின்னர் அநேகமான மாணவர்கள் 'சூம்' தொழில்நுட்பம் அல்லது வேறு ஒன்லைன் முறைகளினூடாக தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க பழக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே யாராவதொரு ஆசிரியர் ஒன்லைன் முறையினூடாக கற்றல் நடவடிக்கையை முன்னெடுப்பாரானால், அவர்களுக்கு திறந்த வெளியான இடமொன்றை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். அத்துடன் அவர்களை தொடர்ச்சியாக அவதானித்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

தனியான அறைகளில் இவ்வாறு தொழில்நுட்ப ரீதியான கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கும்போது, பாலியல் ரீதியான செயற்பாடுகளுக்கு மாணவர்களை உட்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கும் அது வாய்ப்பை ஏற்படுத்திகொடுத்துவிடும். அவ்வாறான வகுப்புகள் இடம்பெறும்போது வீட்டிலுள்ள பெரியவர்கள் அருகிலிருப்பதும் அவசியமாக இருக்கிறது.

இந்தச் சம்பவத்திலும் அவ்வாறானவொரு செயற்பாடே இடம்பெற்றுள்ளது. ஊடகங்களில் 16 பேர் என்று குறிப்பிடப்பட்டாலும், பொலிஸ் நிலையத்தில் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பில் முறைப்பாடு கிடைக்கவில்லை. இரண்டு முறைப்பாடுகளே இதுவரையில் கிடைத்துள்ளன. இவ்விரு முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விசாரணைகளின்போது மேலும் முறைப்பாடுகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்றார்.

## களுத்துறை மாணவி...

களுத்துறை பகுதியிலுள்ள விடுதி ஒன்றின் மேல் மாடியில் இருந்து விழுந்து 16 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் கடந்த 6ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்திய பொலிஸார், 19 வயது இளம்பெண், அவரது 21 வயதான காதலன் உட்பட 3 பேரை கைது செய்தனர்.

அதன் பின்னர் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் நேற்று முன்தினம் (09) அதிகாலை ஹிக்கடுவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சிறுமியை கொலைசெய்யவில்லையென்றும் தொலைபேசி அழைப்பொன்றின் பின்னர் மேல் மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டதாகவும் சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

எவ்வாறாயினும், சந்தேகநபர் வழங்கிய வாக்குமூலத்தின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த மேலதிக விசாரணைகள் தேவைப்படுவதாக நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்தனர். அதன் பிரகாரம் நீதிமன்ற உத்தரவின்பேரில் களுத்துறை பொலிஸார் சந்தேக நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மேலும், உயிரிழந்த மாணவியின் கையடக்கத் தொலைபேசி தரவுகளை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான பணிகளை தற்போது மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கப்பல் விடயத்தில்...

சதி நடந்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் நேற்று (10) தெரிவித்தார்.

இலங்கை கடற்பரப்பில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

இதற்கு முன்னர் நிவ் டயமண்ட் விபத்து இடம்பெற்றது. அதற்குப் பின்னர் இலங்கை கடற்பரப்பை பாதுகாக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சரியாக எடுக்கப்பட்டதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இந்நிகழ்வுகளை பார்க்கும் போது இதில் ஒரு சதி நடந்துள்ளது தெரிகிறது.

உலக நாடுகள் பசுமைப் பொருளாதாரம், நீலப் பொருளாதாரம் குறித்து பேசினாலும் நமது நாட்டில் அது வெறும் வார்த்தைகளில் மட்டும்தான் இருக்கிறது.

அமைச்சுகளை பகிர்ந்தளிப்பதன்மூலம் இது மேலும் தெளிவாகிறது.

கோட்டாபய ஜனாதிபதி அன்று செயற்பட்டது போன்று எந்த மாற்றமும் இன்றி தற்போதைய ஜனாதிபதியும் செயற்படுகிறார். நிவ் டயமண்ட் சம்பவத்துக்குப் பிறகு அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன?

மீண்டும் அவ்வாறானதொரு பாதிப்பிலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் தெளிவான நோக்கம் எனக்கு இருக்கிறது.

எக்ஸ்பிரஸ் பேர்ள், நிவ் டயமண்ட் ஆகிய இரு துயர சம்பவங்களில் இருந்தும் இந்த அரசாங்கம் இன்னும் பாடம் கற்கவில்லை. இந்த முறையற்ற போக்கால் நாடு பெரும் இழப்பை சந்தித்துள்ளது. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் கசிவு இருப்பது முதற்கட்டமாக கண்டுபிடிக்கப்பட்டாலும் அதை அந்நாட்டின் கடல் எல்லைக்குள் நுழைய அனுமதித்த தரப்பினர் யார் என்பது தெரியப்படுத்த வேண்டும்.

உலகில் மிக உயர்தரத்திலான சேவைகளைக் கொண்ட துறைமுகம் எங்களிடம் காணப்பட்டாலும் இந்த விபத்தின்போது அதைத் தடுக்கத் தேவையான உபகரணங்கள் எங்களிடம் இருக்கவில்லை.

இந்த அரசாங்கம் கப்பலை காப்பாற்ற முயற்சித்தது மாத்திரமல்லாமல் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போதைய இந்த விவாதத்தை நிறுத்த பாரிய சதி நடந்தது. நான் கப்பல் தரப்பு சார்பில் பேசவில்லை. நாட்டு மக்கள் மற்றும் சுற்றுச்சூழல் தரப்பினர் சார்பாகவே பேசுகிறேன் என்றார்.

## கப்பல் விவகாரத்தால்...

நட்டஈடு பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்படும் என அமைச்சர் தெரிவித்ததால் எதிர்க்கட்சியினர் அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

பிரேரணையை முன்மொழிந்து எதிர்க்கட்சி உறுப்பினர் துஷார இந்துனில் உரையாற்ற ஆரம்பித்தபோது ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி கருத்து வெளியிட்ட அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ,

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால் ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈட்டை பெற்றுக்கொள்வதற்கான பிரேரணை, இந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரமும் ஜனநாயக பாராளுமன்ற முறைமையின் அடிப்படை சம்பிரதாயங்களுக்கு அமையவும் இந்த சபையில் கலந்துரையாடவோ கேள்வி எழுப்பவோ முடியாத விடயமாகும்.

ஏனெனில், 2018இல் அமைக்கப்பட்ட பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் ஒரு விடயம் அல்லது நீதிமன்ற தீர்ப்பொன்றை வழங்க இருக்கும் விடயம் தொடர்பாக எந்த கேள்விகளையும் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்ப முடியாது. இது உலகில் அனைத்து பாராளுமன்றங்களிலும் பின்பற்றப்பட்டு வரும் சம்பிரதாயமாகும்.

அதன் பிரகாரம், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் எமது கடல் எல்லைக்குள் தீப்பற்றி எரிந்ததால், அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈடாக 6.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களம் சிங்கப்பூர் மேல் நீதிமன்றத்தில் ஏப்ரல் 25ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்திருக்கிறது. அதன் பிரகாரம் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மீண்டும் 15ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

அதேபோன்று குறித்த கப்பல் செலுத்துனர் கெப்டன், கப்பலை சட்டவிரோதமான முறையில் செலுத்தியுள்ளதாக தெரிவித்து அவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம். அந்த வழக்கும் தற்போது விசாரிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறான நிலையில் இந்த பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் நீதிமன்ற தீர்ப்புக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் பொறுப்பற்ற முறையில் கருத்து தெரிவித்திருந்தார்கள்.

அதனால் எமது நாட்டுக்கு தற்போதும் களங்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த வழக்கு தொடர்பாக அழுத்தங்கள் ஏற்பட இடமிருக்கிறது.

அத்துடன் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தை அரசாங்கம் மறைக்க முற்படுவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை இல்லாமலாக்குவதற்கே அரச தரப்பு இந்த விவாதத்தை நடத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கி இருந்தது.

என்றாலும், நிலையியற் கட்டளையின் பிரகாரம் இந்த விவாதத்தை நடத்த முடியாது. அதனால் இந்த விவாதத்தை நடத்துவதா இல்லையா என சபாநாயகர் தீர்மானிக்க வேண்டும்.

வழக்கு விசாரணை இடம்பெற்றுக் கொண்டிருக்கையில், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பான விடயங்களை விவாதிப்பதால் வழக்கு விசாரணைக்கு பாதிப்பு ஏற்படும். இது அபாயமானது.

அதனால் இந்த விவாதத்தை நடத்தாமல் இருப்பதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும். விவாதம் காரணமாக நட்டஈடு பெற்றுக்கொள்வதில் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை சபாநாயகர் உட்பட பிரேரணையில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தேசத்துக்கு துரோகத்தை இழைக்கக்கூடிய இந்த விவாதத்தில் நான் கலந்துகொள்ளப்போவதில்லை எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சி உறுப்பினர் கயந்த கருணாதிலக்க குறிப்பிடுகையில், கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே இந்த விவாதத்தை நடத்தவும் அதற்காக மேலதிகமாக ஒரு தினத்தை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. அதனால் இந்த விவாதத்தினை தொடர்ந்து கொண்டுசெல்ல வேண்டும் என்றார்.

அதன் பின்னர் தயாசிறி ஜயசேகர எம்.பி. எழுந்து, சட்டப் பிரச்சினை இல்லை என்பதாலே சபாநாயகர் தலைமையில் கூடிய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விவாதத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

அதேநேரம், மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்றுக் கொண்டிருக்கையிலேயே பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டது.

அதனால் இது தொடர்பில் நாங்கள் பாராளுமன்றத்தில் கதைக்க வேண்டும். இந்த விடயத்தை பாராளுமன்றத்தில் விவாதிப்பதால் வழக்கு விசாரணைக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்றார்.

அதனைத் தொடர்ந்து பிரேரணையை முன்மொழிந்து எதிர்க்கட்சி உறுப்பினர் துஷார இந்துனில் உரையாற்றிக்கொண்டிருக்கையில், மீண்டும் நீதி அமைச்சர் குறுக்கிட்டு, விவாதத்தை நடத்துவதா இல்லையா என தீர்மானியுங்கள் என சபாநாயகரை கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து காலை 10.20 மணியளவில் பாராளுமன்ற நடவடிக்கையை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்து, கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்துவதாக சபாநாயகர் அறிவித்தார்.

என்றாலும் சபை நடவடிக்கை மீண்டும் நண்பகல் 12.10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது, சபாநாயகர், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை இடம்பெற்றுவருவதால், அதற்கு பாதிப்பு ஏற்படும் விடயங்களை தவிர்த்து, கப்பல் தீப்பற்றி எரிந்ததால் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பு தொடர்பாகவும் அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ள சட்டத்தில் இருக்கும் குறைபாடுகள் தொடர்பாகவும் விவாதத்தில் கருத்து தெரிவிக்கும் வகையில் மட்டுப்படுத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

# போதைப்பொருளுடன் மூவர் கைது



(கனகராசா சரவணன்)

காத்தான்குடி பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் 300 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபர்கள் மூவர் நேற்று (10) கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் நேற்று காத்தான்குடி, பர்ஸான் வீதியில் வைத்து 25 மற்றும் 28 வயதுகளையுடைய இருவரை கைதுசெய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து முறையே 50, 60 மில்லிகிராம் ஐஸ்போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அதேவேளை, ரெலிகொம் வீதியில் வைத்து 190 மில்லிகிராம் ஐஸ்போதைப் பொருளுடன் 33 வயதுடைய சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு இரு வெவ்வேறு சம்பவங்களில் 300 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 3 பேரை கைது செய்துள்ள பொலிஸார் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கையும் எடுத்துள்ளனர்.

# அலுவலக புகையிரத சேவைகள் இரத்து

## நிலைய பொறுப்பதிகாரிகளின் பணிப்பகிஷ்கரிப்பால் பயணிகள் பெரும் அசௌகரியம்

புகையிரத திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம்) பதவிக்கு அதிகாரியொருவரை நியமித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து , புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் நேற்று முன்தினம் (09) நள்ளிரவு 12.00 மணிமுதல் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால், நேற்று பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

இருந்தபோதும், புகையிரத நிலையப் பொறுப்பதிகாரிகளின் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தால் நேற்று (10) காலையில் 05 புகையிரத சேவைகளை இரத்துச் செய்ய நேர்ந்ததாக புகையிரத திணைக்களம் தெரிவித்தது.

புத்தளம் வீதியில் ஒரு புகையிரத சேவையும் களனிவெளி வீதியில் இரு புகையிரத சேவையும் குருநாகல் மற்றும் மொரட்டுவை ஆகிய பிரதேசங்களிலிருந்து கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை நோக்கி பயணிக்கும் இரு புகையிரதங்களுமே இவ்வாறு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக புகையிரத திணைக்கள பிரதி முகாமையாளர் எம்.ஜே. இதிபொலகே தெரிவித்தார்.



இதேவேளை, கொழும்பு – பதுளை வரையான உடரட மெனிக்கே புகையிரதமும் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், நாளாந்த புகையிரத சேவைகள் முறையாகவே இடம்பெற்றிருந்தன. நேற்றுக் காலை ஐந்து அலுவலக புகையிரத சேவைகளே இரத்துச் செய்யப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக 7- 8 புகையிரத சேவைகள் இரத்தாகும் சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. மாலையிலும் ஐந்து புகையிரத சேவைகளே இரத்தாகியிருந்தன.

இந்நிலையில் இன்று (நேற்று) இரவு சேவையில் ஈடுபடுத்தபடவிருந்த தபால் சேவை புகையிரதங்களை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக நேற்று புகையிரத சேவையில் காலதாமமும் ஏற்பட்டிருந்தது. புகையிரத சேவை மட்டுப்படுத்தப்பட்டிருந்ததால் பயணிகளும் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டிருந்தனர்.

இந்நிலையில், குருநாகலிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி வந்த புகையிரத பயணிகளிடம் நேற்று (10) ரிக்கட் பரிசோதகர்கள் சிலர் கட்டணம் அறவிட்டுள்ளனர். "கம்பஹா பிரதேசத்தை தாண்டி வரும் போதும் புகையிரதத்துக்குள் பிரயாணச் சீட்டுகளை கண்காணித்தார்கள். அதன் பின்னர் எங்களுக்கு பிரயாணச் சீட்டு விநியோகிக்க வில்லை என்று குறிப்பிட்டார்கள். 30 – 40 வரையிலான ரிக்கட் பரிசோதகர்கள் புகையிரதத்துக்குள் நுழைந்தார்கள். எங்களின் அடையாள அட்டை இலக்கத்தை கோரினார்கள். பின்னர் 700 ரூபாவை பெற்றுக்கொண்டு சீட்டொன்றையும் எழுதிக் கொடுத்தார்கள்"என்று பயணிகள் குற்றஞ்சாட்டியிருந்தனர். இதேவேளை நேற்று மாலையாகும் போது 40 வரையான புகையிரத சேவைகள் இரத்தாகியிருந்ததாக புகையிரத திணைக்களம் அறிவித்திருந்தது.

# குளிரூட்டி பழுதுபார்க்கும் நிலையத்துக்குள் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழப்பு

## சந்தேகநபர்கள் 14 பேருக்கு 23 வரை விளக்கமறியல்

கொழும்பு, தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள குளிரூட்டி பழுதுபார்க்கும் நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்ததாக்கூறி நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொருவர் பலத்த காயங்களுடன் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிசை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தெஹிவளை பகுதியில் உள்ள குளிரூட்டி பழுது பார்க்கும் நிலையமொன்றுக்குள் அத்துமீறி பிரவேசித்த இருவர் தப்பிச் செல்ல முயற்சித்ததாகவும் அவர்களை தாக்கி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைவாக தெஹிவளை பொலிஸாரினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

கல்கிசை, படோவிட்ட பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய நபரொருவரே இச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். தெஹிவளை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பில் லொறி, வேன் மற்றும் முச்சக்கர வண்டி என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், சந்தேகநபர்கள் வீதியில் நடந்து சென்ற ஒருவரை கடைக்குள் அத்துமீறி நுழைந்ததாக கருதி குளிரூட்டி திருத்தும் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேக நபர்கள் அவரைத் தாக்கியதுடன் அதன்பிறகு அவருடன் வந்த மற்றைய நபரை தொலைபேசி மூலம் அழைக்கச் செய்து அவர் வந்ததும் அவரையும் தாக்கி தடுத்து நிறுத்தியுள்ளனர்.

அதன் பின்னர் சந்தேக நபர்கள் அத்துமீறி நுழைந்ததாகக் கூறி காயமடைந்த அவர்களை தெஹிவளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அதே நேரத்தில் அவர்கள் தாக்கப்பட்ட இடத்தை கழுவி சுத்தம் செய்யும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 14 சந்தேக நபர்களும் கிண்ணியா, நிலாவெளி, அவிசாவளை, களுத்துறை, பண்டாரகம, காலி, பேருவளை, கந்தளாய், ஹட்டன் மற்றும் ருவன்வெல்ல பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் . இரண்டு சந்தேக நபர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை . தெஹிவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட குழுவினர் கல்கிசை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவர்களை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் நேற்று (10) உத்தரவிட்டுள்ளது.

# கொழும்பு- கண்டி பிரதான வீதியில் வாகன விபத்து

## மூவர் மருத்துவமனையில் அனுமதி

கொழும்பு- கண்டி பிரதான வீதி பஸ்யால பிரதேசத்தில் கனரக வாகனமொன்றும் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் பஸ்ஸில் பயணித்த மூவர் காயங்களுக்குள் ளான நிலையில் வரக்காபொல ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக நிட்டம்புவ பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து கண்டி நோக்கி பயணித்த தனியார் பஸ் மற்றும் கனரக வாகனமொன்றுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளான கனரக வாகனம் வீதியின் வலது புறமாக பயணித்திருந்தமையே விபத்துக்கு காரணம் என்பது ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக நிட்டம்புவ பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

# தினசரி பலாபலன்கள்

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 28 ஆம் நாள்
வியாழக்கிழமை

**மேஷம்**: புதிய முயற்சிகளில் வெற்றியும் இலாபங்களும் அமையும். யாரையும் நம்பி எதையும் ஒப்படைத்துச் செல்லாதீர்கள்.

**ரிஷபம்**: திட்டமிட்ட பிரயாணத்தால் ஓரளவு இலாபம் உண்டு. எதற்கும் அவசரம் வேண்டாம். பொறுமையோடு இருங்கள்.

**மிதுனம்**: தொழில், வியாபாரத்தில் அதிக எரிச்சல், கோபம் அடைவீர்கள். எதற்கும் பொறுமை இழந்து விடாதீர்கள்.

**கடகம்**: காதல், திருமணம் கைகூடி வரும். பங்கு வியாபாரத்தில் வெற்றியுடன் அதிக இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்**: நினைத்த காரியத்தில் வெற்றி. நோய், கடன் நிவர்த்தி. எதிரிகளை வெற்றி கொள்வீர்கள்.

**கன்னி**: உங்களது மனக்குறையை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள். உடல் நலம் கவனம் வேண்டும்.

**துலாம்**: குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பீர்கள்.உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

**விருச்சிகம்**: உங்களுக்கென எதையாவது இன்று வாங்குவீர்கள். மனத் துணிவுடன் காரியங்களை சாதிப்பீர்கள்.

**தனுசு**: குதர்க்கமான பேச்சுக்கள் வேண்டாம்.பணம், பொருள் கைமாறும்போது கவனமாக செயல்படவும்.

**மகரம்**: நண்பர்கள் சந்திப்பால் நல்ல பலன் கிடைக்கும்.உடல் நலம் சிறப்பாக அமையும். தெளிந்த சிந்தனையுடன் சேவையாற்றுவீர்கள்.

**கும்பம்**: செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதிர்பாராத உடல் நலக் குறைபாடுகளால் செலவுகள் ஏற்படலாம்.

**மீனம்**: தொழில், வியாபாரத்தில் மேன்மை உண்டு. கைவிட்டுப்போனவை திரும்பக் கிடைக்கும், புகழ், செல்வாக்குடன் விளங்குவீர்கள்.

| | | |
|---|---|---|
| திதி | : | ஷஷ்டி மு.ப.11.27 வரை பின் ஸப்தமி (தேய்) |
| நட்சத்திரம் | : | உத்தராடம் பி.ப.2.37 வரை பின் திருவோணம் |
| யோகம் | : | மரண யோகம் பி.ப.4.06 வரை பின் சித்தம். |
| வார சூலை | : | தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| நல்ல நேரம் | : | மு.ப.10.54 - 11.54 மணி வரை |
| ராகு காலம் | : | 1.24 - 2.54 மணி வரை |
| எமகண்டம் | : | 5.54 - 7.24 மணி வரை |
| குளிகை | : | 8.54 - 10.24 மணி வரை |
| சந்திராஷ்டமம் | : | இடப-மிதுன ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| தனஅதிஷ்டம் | : | பரணி,பூரம், பூராடம் பிறந்தவர்களுக்கு) |
| விஷேட தினம் | : | -------- |

கணிப்பு : சிவா பாஸ்கரராவ்
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# கணினி அமைப்பின் செயலிழப்பு காரணமாக ஆவண அங்கீகார செயன்முறை தாமதம்

## மறு அறிவித்தல் வரை சேவை மட்டுப்படுத்தப்படவுள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவிப்பு

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவில் உள்ள கணினி அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, கொழும்பில் உள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவு மற்றும் யாழ்ப்பாணம், திருகோணமலை, மாத்தறை, கண்டி, குருநாகல் பிராந்திய அலுவலகங்கள் ஆகியவற்றின் ஆவண அங்கீகார செயன்முறை மறு அறிவித்தல் வரை மட்டுப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுமுகமான ஆவண அங்கீகார செயன்முறைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் முகமாக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு துரிதமான திருத்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. தற்போது, மிகவும் அவசரமான ஆவணங்களுக்கு மட்டுமே கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவு அங்கீகாரமளிப்பதுடன், கணினி பழுதுபார்க்கப்பட்டவுடன் ஏனைய ஆவணங்களுக்கு அங்கீகாரமளிக்கப்படும்.

ஏனைய கொன்சியூலர் சேவைகள் எந்தவித தடங்கலும் இன்றி தொடர்கின்றன. அங்கீகார செயன்முறை முழுமையாக செயற்படுத்தப்பட்டவுடன் அது குறித்து பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும். தொழில்நுட்பக் கோளாறினால் பொதுமக்களுக்கு ஏதேனும் அசௌகரியம் ஏற்பட்டால் வருந்துகின்றோம்.

தேவையான சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் சாத்தியக்கூறுகள் குறித்து, பொதுமக்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளலாம்.

கொழும்பு, கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவுக்கு 0112338812 என்ற எண்ணுக்கு அழைப்பு விடுக்கலாம் என்பதுடன், யாழ்ப்பாணம் - 0212215972, திருகோணமலை - 0262223182ஃ86, கண்டி – 0812384410, குருநாகல் - 0372225931, மாத்தறை - 0412226713/0412226697 ஆகிய இலக்கங்களுக்கு அழைப்பு விடுக்க முடியும் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெற்றி நிச்சயம்

"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/






நீங்கள அனிமேஷன் திரைப்படம்
ஒன்றை உருவாக்க விரும்புகிறீர்களா?

பரிணமித்து வரும் அனிமேஷன் துறையில் நீங்களும்
சிறந்து விளங்க விரும்பினால் இப்போதே
Mogo Studios இல
இணைந்து கொள்ளுங்கள்!

பின்வருவனவற்றுக்கு விண்ணப்பியுங்கள்:

Character Rigging Artists
3D Generalists
Character Animators

உங்கள் விபரங்களை reach@mogo.lk ஊடாக அனுப்பி விண்ணப்பியுங்கள்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மே 11ஆம் திகதி, வியாழக்கிழமை**

# தமிழர்களின் எதிர்பார்ப்பு!

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கி நல்லிணக்கம் மற்றும் அதிகாரப்பகிர்வு தொடர்பில் பரந்துபட்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனாதிபதிக்கும் தமிழரசுக்கட்சிக்கும் இடையிலான சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி, அதிகாரப்பகிர்வு விவகாரத்தைப் பொறுத்தமட்டில், கடந்தகால ஆவணங்களை ஆராய்வது குறித்தும், முன்னாள் ஆளுநர்கள் மற்றும் முதலமைச்சர்களையும் பேச்சுவார்த்தையில் இணைத்துக்கொள்வது பற்றியும் இதன்போது பேசப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளடங்கலாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று கடந்த செவ்வாய்கிழமை (09) பி.ப 3.30 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா, கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா.சாணக்கியன், கலையரசன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். இருப்பினும், ஜனாதிபதியுடனான இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொண்டிருக்கவில்லை.

ஜனாதிபதியுடனான செவ்வாய்கிழமை (09) சந்திப்பின்போது இன்று வியாழன் (11) மற்றும் வெள்ளிக்கிழமை (12) நடைபெறவுள்ள சந்திப்பு குறித்துப் பேசப்பட்டுள்ள அதேவேளை, இச்சந்திப்புகளுக்கு வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்கள் இங்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதன்படி, இன்றும் நாளையும் நடைபெறவுள்ள சந்திப்புகளுக்கு வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங்களையும் சேர்ந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுவதற்கு ஜனாதிபதி இங்கு இணங்கியுள்ளார்.

இன்று நல்லிணக்கம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்கீழ் காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம், காணிப்பிரச்சினை, பயங்கரவாதத் தடைச்சட்டம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்படும். அதேபோன்று நாளை 12ஆம் திகதி அதிகாரப்பகிர்வு தொடர்பிலும் கலந்துரையாடப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைத்திருக்கும் இந்தச் சந்திப்பு தொடர்பில் தமிழ் அரசியல் வட்டாரங்களில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், இதனை ஆரோக்கியமான கண்ணோட்டத்தில் நோக்க வேண்டியது தமிழர் தரப்பின் கடமையாகும். இலங்கையின் அரசியல் தீர்வு பேச்சுகளின் வரலாறை எடுத்துக்கொண்டால் தமிழர்கள் ஏமாற்றப்பட்டிருப்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். அதற்காக ஜனாதிபதி விடுத்திருக்கும் அழைப்பை தட்டிக்கழிப்பது நியாயமானதல்ல. அது தார்மீகமும் இல்லை.

பொருளாதாரத்தை வழமை நிலைக்குக் கொண்டுவருவதை நோக்கிய ரணில் விக்கிரமசிங்கவின் மறுசீரமைப்புத் திட்டத்தின் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளின் விளைவாக படிப்படியாக பொருளாதார நிலைவரத்தில் காணப்படக்கூடியதாக இருக்கும் மேம்பாடுகள் உண்மையில் அவருக்கு ஒரு மதிப்பை தென்னிலங்கையில் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றன. அத்தகைய ஒரு சூழ்நிலையில், தமிழர் தரப்பின் ஒத்துழைப்பை அவர் பெறவேண்டுமானால் தனது பக்கத்திலும் அணுகுமுறைகளில் சில மாற்றங்களைச் செய்யவேண்டியது அவசியமாகும். சில விட்டுக்கொடுப்புகளை செய்யவேண்டும். அரசியல் பலம் இல்லாத ஒரு தலைவராகத் திகழும் ரணில் விக்கிரமசிங்க வழங்கப்போகும் தீர்வு நீர்த்துப்போனதாகவும் இருக்கக்கூடாது.

நல்லிணக்கம் குறித்துப் பேசப்படும் போதும் அரசியல் தீர்வு குறித்துப் பேசப்படும் போதும் கடந்தகால பட்டறிவுகள், பேச்சுகள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். தமிழர்களின் அபிலாஷைகள் நிறைவேறும் வகையில் இந்த சந்திப்பு இடம்பெறுதல் வேண்டும். இன்று ஆரம்பமாகும் பேச்சுகள் வெறுமனே தமிழர்களை ஏமாற்றும் மற்றுமொரு முயற்சியாகி விடக்கூடாது. தமிழர் பிரதிநிதிகள் பொறுப்பாக செயற்பட்டு மக்களுக்கு தீர்வொன்று கிடைக்க வழி செய்ய வேண்டும். நீண்டகாலப் பிரச்சினைகளுக்கான தீர்வு நியாயமான அடிப்படையில் தீர்க்கப்படவேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு.



# கொரோனா பெருந்தொற்று முழுமையாக ஓயவில்லை!

**உலக சுகாதார ஸ்தாபனத்தின் முன்னாள் விஞ்ஞானி எச்சரிக்கை**

**உலக சுகாதார ஸ்தாபனத்தின் முன்னாள் விஞ்ஞானி சௌம்யா சுவாமிநாதன், 'த இந்து' ஆங்கில நாளிதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டியிலிருந்து...**

**Q கொரோனா பெருந்தொற்று முடிவுக்கு வந்துவிட்டதாக உலக சுகாதார ஸ்தாபனம் (டபிள்யூ.எச்.ஓ.) அறிவித்துள்ளது. உண்மையிலேயே பெருந்தொற்று ஓய்ந்துவிட்டதா?**

கொரோனா பெருந்தோற்று முழுமையாக முடிவுக்கு வந்துவிட்டதாகக் கூறமுடியாது. சர்வதேச அளவிலான பொது சுகாதார அவசரநிலையை மட்டுமே டபிள்யூ.எச்.ஓ. நீக்கியிருக்கிறது. இதன்படி கொரோனா அபாயநிலை முடிவுக்கு வந்துவிட்டது என்று மட்டுமே கூறலாம். கொரோனா அச்சுறுத்தல் இன்னமும் நீடிக்கிறது என்று டபிள்யூ.எச்.ஓ. இயக்குநரே எச்சரித்திருக்கிறார். இதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.

கொரோனா வைரஸின் மரபணு மாற்றம் கணிக்க முடியாததாக இருக்கிறது. இனிவரும் காலங்களில் அதிவேகமாக பரவக்கூடிய வீரியமான கொரோனா வைரஸ் உருவாக வாய்ப்பு இருக்கிறது.

ஏதாவது ஒரு நாட்டில் வீரியமான கொரோனா வைரஸ் பரவுவது கண்டறியப்பட்டால் டபிள்யூ.எச்.ஓ. மீண்டும் பொது சுகாதார அவசரநிலையை அறிவிக்கும். கொரோனா பெருந்தொற்று முழுமையாக ஓயவில்லை. நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இன்புளுவன்ஸா வைரஸ் தொற்றில் இருந்து தற்காத்து கொள்ள ஆண்டுதோறும் தடுப்பூசியை செலுத்திக் கொள்கிறோம். இந்த தடுப்பூசியின் மருந்துகளிலும் மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. கொரோனா தடுப்பூசி காரணமாக அந்த வைரஸை எதிர்க்கும் சக்தி நமக்கு கிடைத்திருக்கிறது. இந்த எதிர்ப்பு சக்தி குறையக்கூடும். இன்புளுவன்ஸா தடுப்பூசி போன்று கொரோனாவுக்கும் தொடர்ச்சியாக தடுப்பூசி செலுத்தி கொள்ள வேண்டுமா என்பது குறித்தும் சிந்திக்க வேண்டும்.

**Q தொடர்ச்சியாக கொரோனா தடுப்பூசி போட வேண்டுமா?**

இப்போதைய நிலையில், பெரும்பாலான நாடுகளில் இரு தவணை தடுப்பூசியும், ஒரு பூஸ்டர் தடுப்பூசியும் போடப்பட்டு இருக்கிறது. இந்த தடுப்பூசி திட்டமே பெரும்பாலான நாடுகளில் இன்னும் முழுமை அடையவில்லை. இந்தியாவில்கூட 20% பேர் மட்டுமே பூஸ்டர் தடுப்பூசியை செலுத்தி உள்ளனர். முதியோர், நாள்பட்ட நோயாளிகளில்கூட 30% பேர் மட்டுமே பூஸ்டர் தடுப்பூசியை செலுத்தி உள்ளனர்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் உலகம் முழுவதும் ஏராளமான புதிய வகை கொரோனா வைரஸ்கள் உருவாகி உள்ளன. இவை அனைத்துமே ஒமிக்ரொன் கொரோனா வைரஸ் குடும்பத்தை சேர்ந்தவையாக உள்ளன. இந்த வைரஸ்களை தடுப்பதில் தற்போதைய கொரோனா தடுப்பூசிகள் நல்ல பலன் அளிக்கின்றன. ஆனால், தடுப்பூசியின் வீரியம் எவ்வளவு காலம் நீடித்திருக்கும் என்பதை துல்லியமாக கணிக்க முடியாது. ஒரு சிலருக்கு மீண்டும் மீண்டும் கொரோனா தொற்று ஏற்பட்டு வருகிறது.

நூறு சதவீதம் பலன் அளிக்கக்கூடிய தடுப்பூசி நம்மிடம் இல்லை என்பதே உண்மை. தடுப்பூசி தொடர்பாக தொடர்ந்து ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும்.

டபிள்யூ.எச்.ஓ.வின் தொழில்நுட்ப ஆலோசனைக்குழு கொரோனா வைரஸின் மரபணு மாற்றங்கள் குறித்தும் தடுப்பூசியின் வீரியம் குறித்தும் தொடர்ந்து ஆய்வுசெய்து வருகிறது. குறிப்பாக பல்வேறு இனங்கள், வெவ்வேறு வயது பிரிவு, பல்வேறு சுற்றுச்சூழல்களில் வாழும் மக்களிடையே கொரோனா தடுப்பூசி எவ்வாறு பலன் அளிக்கிறது என்பது குறித்து டபிள்யூ.எச்.ஓ. தொடர்ந்து ஆய்வுசெய்து வருகிறது.

கொரோனா வைரஸ் பரவல், தடுப்பூசி குறித்து நாடுகள் தனிப்பட்ட முறையில் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். இதன் அடிப்படையில் மக்களுக்கு கூடுதல் பூஸ்டர் தடுப்பூசிகளை செலுத்த வேண்டுமா, யாருக்கெல்லாம் பூஸ்டர் தடுப்பூசி தேவைப்படும், பூஸ்டர் தடுப்பூசி போடுவதற்கான கால இடைவெளி ஆகியவற்றை தீர்மானிக்க முடியும். அதற்கேற்ப கொரோனா தடுப்பூசி தொடர்பான தொலைநோக்கு திட்டத்தை வரையறுக்க முடியும்.

**Q கொரோனாவுக்காக உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளை அழிக்கக்கூடாது என்று நீங்கள் கூறியது எதற்காக?**

கொரோனா மட்டுமன்றி இதர சுகாதார சவால்களையும் எதிர்கொள்ள அனைத்து நாடுகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும். இதற்கு கொரோனாவை எதிர்கொள்ள உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளை அழிக்காமல், அந்தக் கட்டமைப்புகளை மேலும் மேம்படுத்த வேண்டும். இதன்மூலம் எத்தகைய சுகாதார சவால்களையும் எதிர்கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் புதிய கொரோனா வைரஸ் உருவாகலாம். பறவைக் காய்ச்சல் உள்ளிட்ட புதிய அச்சுறுத்தல்கள் எழவும் வாய்ப்புகள் உள்ளன. எனவே, எதையும் எதிர்கொள்ள தயார்நிலையில் இருக்க வேண்டும். நமது மருத்துவ கட்டமைப்புகள் போதுமானதா, நாம் தயார் நிலையில் இருக்கிறோமா என்பதை அவ்வப்போது உறுதி செய்து கொள்ள வேண்டும். எவ்வளவு காலத்தில் புதிய பரிசோதனை கருவிகள், தடுப்பூசிகளை கண்டுபிடிக்க முடியும் என்பது குறித்து சுயபரிசோதனை செய்ய வேண்டும்.

ஜி7 அமைப்பு புதிய தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறது. அதாவது புதிதாக பெருந்தொற்று ஏற்பட்டால் 100 நாட்களில் தடுப்பூசியை கண்டுபிடிக்க வேண்டும் என்று அந்த அமைப்பு இலக்கு நிர்ணயித்திருப்பது வரவேற்கத்தக்கது.

**Q கொரோனா தடுப்பூசி பக்க விளைவுகளைத் தடுக்க முடியுமா?**

காலாவதி தடுப்பூசிகள், மருத்துவ பணியாளர்களின் கவனக்குறைவு, தடுப்பூசியால் ஏற்படும் பக்க விளைவுகள் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்த தகவல்களை முறையாகப் பதிவு செய்ய வேண்டும். ஆனால், அந்த தகவல்கள் பொதுவெளியில் கசிந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தடுப்பூசி செலுத்தி கொண்டவர்களில் சிலருக்கு பாதிப்பு ஏற்படுவது இயல்பானது. அவை குறித்த தகவல்கள் பொதுமக்களிடையே பரவினால் மோசமான விளைவுகள் ஏற்படும். 10 இலட்சம் பேருக்கு தடுப்பூசி செலுத்தும்போது 5 பேருக்கு பாதிப்புகள் ஏற்படக்கூடும்.

அஸ்ட்ராஜெனிகா கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களில் சிலருக்கு இரத்த உறைவும் ஆர்.என்.ஏ. தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டவர்களில் சிலருக்கு இதய தசை அழற்சி பிரச்சினைகளும் ஏற்பட்டன. இதுபோன்ற பிரச்சினை ஏற்பட்டவர்களில் சிலர் உயிரிழந்துள்ளனர். பெரும்பாலானோர் குணமடைந்து விட்டனர். தடுப்பூசிகளால் ஏற்படும் பக்கவிளைவுகள் குறித்து தீவிரமாக ஆராய வேண்டும்.

டபிள்யூ.எச்.ஓவைப் பொறுத்தவரை தடுப்பூசி, மருந்துகளுக்கு அனுமதி வழங்கும்போது புள்ளிவிவரங்களை மிகவும் கவனமாக ஆய்வு செய்கிறோம். தடுப்பூசி, மருந்துகளின் பரிசோதனைகளில் திருப்திகரமான முடிவுகள் கிடைத்தால் மட்டுமே அவற்றுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. பெரும்பாலும் வளர்ந்த நாடுகள் மட்டுமே தெளிவான புள்ளிவிவரங்களை அளிக்கின்றன. வளரும் மற்றும் பின்தங்கிய நாடுகளில் தடுப்பூசி, மருந்துகளால் ஏற்படும் பக்க விளைவுகள் குறித்த தரவுகள் முறையாகப் பதிவு செய்யப்படவில்லை. இந்நிலை மாற வேண்டும். வெளிப்படைத்தன்மை இருந்தால் மட்டுமே மக்களிடம் நம்பிக்கை ஏற்படும். இது தொடர்பாக அந்தந்த நாடுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**Q மக்களுக்கான உங்கள் அறிவுரை என்ன?**

கொரோனா பெருந்தொற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்த முழுமையான அறிவை நாம் பெற்றிருக்கிறோம். கொரோனாவுக்கு எதிரான போரில் பின்பற்றிய தடுப்பு நடைமுறைகளை பொதுமக்கள் எப்போதும் பின்பற்ற வேண்டும்.

அனைவரும் இரு தவணை கொரோனா தடுப்பூசி செலுத்தி இருப்பது நல்லது. பூஸ்டர் தடுப்பூசியும் அவசியமானது. என்னைப் பொறுத்தவரை வீட்டை விட்டு வெளியே செல்லும்போது அனைவரும் முகக்கவசம் அணிவது பாதுகாப்பானது. இதன்மூலம் நீங்கள், உங்களையும் பாதுகாக்கலாம், மற்றவர்களையும் நோய்த்தொற்றில் இருந்து பாதுகாக்க முடியும்.

வீடு, அலுவலகம், பொது இடங்களில் சுத்தம், சுகாதாரத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இதன்மூலம் கொரோனா வைரஸ் மட்டுமன்றி நுரையீரல் தொடர்பான நோய்களில் இருந்தும் தற்காத்து கொள்ளமுடியும். தடுப்பூசி, முகக்கவசம், கூட்டநெரிசல் மிகுந்த இடங்களைத் தவிர்ப்பது, சுத்தத்தைப் பேணுவது, அடிக்கடி கைகளை கழுவுவது ஆகிய நடைமுறைகளை அனைத்து தரப்பு மக்களும் பின்பற்ற வேண்டுகிறேன்.

## நக்கல் நமசிவாயம்

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் எம்.பிக்களை மட்டும் ரணில் ஐயா சந்திக்கிறாரே... முஸ்லிம் அரசியல் தலைவர்கள் யாரும் தங்களுக்கும் இப்படியான சந்திப்பொன்ற கேக்கேல்லையே... முஸ்லிம் மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லைப்போல என்னங்கோ..!



## இன்றைய நாளில்...

- 1812 – லண்டனில் பாராளுமன்றத்தில் வைத்து ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் ஸ்பென்சர் பெர்சிவல், ஜோன் பெல்லிங்கம் என்பவனால் கொல்லப்பட்டார்.
- 1905 – அல்பேர்ட் ஐன்ஸ்டீன், பிரௌனியன் இயக்கம் பற்றிய தனது விளக்கத்தை வெளியிட்டார்.
- 1924 – மெர்சிடிஸ்-பென்ஸ் நிறுவனம் காட்லீப் டைம்லர், கார்ல் பென்ஸ் ஆகியோரினால் ஆரம்பிக்கப்பட்டது.
- 1949 – சியாம் நாடு தாய்லாந்து என இரண்டாவது தடவையாகப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1960 – முதலாவது கருத்தடை மாத்திரை அறிமுகமானது.
- 1972 – ஐக்கிய அமெரிக்கா அணுகுண்டு சோதனையை நெவாடாவில் நடத்தியது.
- 1995 – 170 நாடுகள் அணுக்கரு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன.
- 1998 – இந்தியா, பொக்ரானில் மூன்று அணுச் சோதனைகளை நடத்தியது.

# கதலி வாழைப்பழங்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முதற்கட்டமாக நடவடிக்கை

## அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் பாராட்டு






வாய்ப்புகளை சரியான முறையில் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை சர்வதேச சந்தைகளுக்கு எடுத்துச் செல்லுகின்றபோது, எமது மக்களின் பொருளாதாரத்தினை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்ல முடியும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆழமான தீர்க்கதரிசனமான முயற்சிகளை முன்னெடுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், புத்தூரில் அமைக்கப்பட்டுள்ள, வழைப்பழ ஏற்றுமதி தொழிற்சாலையை அண்மையில் பார்வையிட்ட கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் நிதியுதவியில் விவசாய செயற்பாடுகளை நவீனமயப்படுத்தும் திட்டத்துக்கு அமைய அமைக்கப்பட்டுள்ள குறித்த தொழிற்சாலையில் பதனிடப்படுகின்ற கதலி வாழைப்பழங்கள் டுபாய் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முதற்கட்டமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் சுமார் 250 விவசாயிகள் நேரடியாக பயனடைந்துள்ளதுடன் கதலி வாழைப்பழத்துக்கு நியாயமான விலையையும் யாழ்ப்பாண விவசாயிகள் பெறத் தொடங்கியுள்ளனர்.

எதிர்வரும் மாதங்களில் இத்திட்டத்தின் மூலம் ஏற்றுமதியினை விஸ்தரித்து நேரடியாக பயனடையும் விவசாயிகளின் எண்ணிக்கையை 700 ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளதாக அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், எதிர்வரும் மாதங்களில் வாரத்துக்கு 22,000 கிலோ கதலி வாழைப்பழம் யாழ்ப்பாணத்தில் இருந்து ஏற்றுமதி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொக்குவில் இந்துக் கல்லூரியில் நிதி மோசடி?



| | |
|---|---|
| பரிசுத் தின பரிசில் - 2019 | |
| மாணவர் தலைவர் சின்னம் தயாரித்த செலவு | |
| மூலதனச் செலவுகள் | |
| போட்டோக் கொப்பி மெசின் கொள்வனவு | |
| DVD Player கொள்வனவு | |
| Stand fan கொள்வனவு (Office) வடக்கு | |
| தேமா மீற்றர் கொள்வனவு (Covit - 19) | |
| ரீலர் கொள்வனவு - Technology | |
| ஒலிபெருக்கி கொள்வனவு | |
| Mic கொள்வனவு | |
| Scaner கொள்வனவு - ICT வடக்கு | |
| மின் கேற்றல் கொள்வனவு (மனையியல்) | |
| C.C.T Cameraக்கான மிகுதிக் கொடுப்பனவு | |
| வெளி மைதானத்திற்கு சுற்று நெற் வேலி அமைத்தல் செலவு - கிராம எழுச்சித் திட்டம் | 1,9 |
| 31.12.2020 மீதி - காசு | |
| 6,101,013.41 | |

கு சுற்று நெற் வேலி அமைத்தல் செலவு - கிராம எழுச்சித் திட்டம்
1,940,693.00
2,371,630.00
வேண்டி உள்ளது) (430,937.00)
கணக்காய்வாளர்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் மீது சுமத்தப்பட்டுள்ள நிதி மோசடிக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் யாழ். வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகளுக்கும் தொடர்பிருப்பதாக பாடசாலை நலன் விரும்பிகள் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.

தற்போதைய பாடசாலை அதிபர் பாடசாலையை பயன்படுத்தி பல்வேறு நிதி முறைகேடுகளில் ஈடுபட்டமை ஆதாரங்களுடன் வெளிவந்த நிலையில், சில முறைகேடுகளுக்கு யாழ். வலயக் கல்வி அலுவலகம் உடந்தையாக இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் அனுமதியின்போது எவ்விதமான நிதியும் பெறக்கூடாது என்பது கல்வி அமைச்சின் சுற்றுநிருபமாக உள்ள நிலையில் நன்கொடை என்ற பெயரில் பல இலட்சம் ரூபா நிதி பெறப்பட்டமை வெளிவந்துள்ளது.

பாடசாலையின் அபிவிருத்திக்கு பாடசாலை அபிவிருத்தி சங்கத்திலிருந்து நிதி பெறப்படும்போது குறிப்பிடப்பட்டளவு நிதிக்கு மேல் செலவு செய்யப்படுமானால் வலயக் கல்வி அலுவலகம் மற்றும் மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என கூறப்பட்டாலும் பல இலட்ச ரூபா வேலைத்திட்டங்களுக்கு அனுமதி பெறப்படாமலே இடம்பெற்றுள்ளது.

குறித்த பாடசாலை அதிபரின் மோசடி தொடர்பில் ஏற்கனவே மாகாண கல்வி அமைச்சுக்கு பல தடவைகள் முறைப்பாடுகள் முன்வைத்தும் குறித்த பாடசாலை அதிபர், வடமாகாண முன்னாள் அமைச்சு ஒன்றின் செயலாளராக இருந்தவரின் நெருங்கிய உறவினராகக் காணப்படுவதால் நடவடிக்கை எடுப்பவர்களுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

குறித்த பாடசாலையில் இடம்பெற்ற பல மில்லியன் ரூபா மோசடிக்கு பழைய மாணவர் சங்கமும் காரணமாக அமைவதோடு வடக்கு கல்வி உயர் அதிகாரிகளும் குறித்த மோசடிகளுக்கு உடந்தையாக உள்ளமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

### விசாரணைகள் ஆரம்பம்

இது தொடர்பில் கோரப்பட்ட தகவல் அறியும் விண்ணப்பத்தில் பாடசாலை அபிவிருத்தி சங்கத்துக்கு 20 இலட்சம் ரூபா வழங்க வேண்டும் என தகவல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், வெளியிடப்பட்ட கணக்கறிக்கையில் 4 இலட்சம் ரூபா வழங்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக இருந்த ஒருவர் கம்பெரலிய திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 20 இலட்சம் ரூபா நிதியில் பாடசாலை அதிபருடன் இணைந்து பல்வேறு முறைகேடுகளுடன் தொடர்புபட்டதாக குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறித்த பாடசாலையில் இடம்பெறும் மோசடிகளுடன் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் தொடர்பிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் வடமாகாண கல்வியமைச்சுக்கு குறித்த பாடசாலையில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் மூவர் அடங்கிய விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சமூக – பொருளாதார பாதுகாப்புக்கு தொழிலாளர் சம்மேளனத்தின் பங்களிப்பு தேவை

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை





மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்புக்கு சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் பங்களிப்பும் அவசியம். அதற்கான உரிய தலையீடுகளை மேற்கொள்ளுமாறு சர்வதேசத்திடம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கோரியுள்ளது.

அத்துடன், மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் நிறைவை நினைவுகூரும் வகையில் முன்னெடுக்கப்படும் ''மலையகம் - 200'' வேலைத்திட்டங்களில் சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் பங்கேற்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் உயர்மட்ட பிரதிநிதிகளுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸினருக்கும் இடையிலான சந்திப்பு, இ.தொ.கா. தலைமையகத்தில் நேற்று (10) நடைபெற்றது.

மேற்படி சம்மேளனத்தின் சார்பில் இலங்கைக்கான பணிப்பாளர் சிம்ரின் சிங், ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பிரதிநிதி ஏரியல் கெஸ்ட்ரோ, நிபுணர் ஷைட் சுல்தான் அகமட் ஆகியோரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் அதன் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், நிர்வாக செயலாளர் விஜயலக்ஷ்மி தொண்டமான், தொழிற்சங்க பிரிவின் சிரேஷ்ட பணிப்பாளர் எஸ்.ராஜமணி ஆகியோரும் பங்கேற்றனர்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் உட்பட தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களுக்கான பாதுகாப்பு பொறிமுறை, சர்வதேச தொழில் சம்மேளனத்தின் வகிபாகம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் விவகாரத்தில் சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், எதிர்காலத்திலும் ஒத்துழைப்புகள் அவசியம் எனவும் கேட்டுக்கொண்டார்.

# “தொலைபேசி அழைப்பின் பின்னரே ஜன்னலிலிருந்து குதித்தார்”

## களுத்துறை மாணவியின் மர்ம மரணம் குறித்து பிரதான சந்தேக நபர் பொலிஸாரிடம் வாக்குமூலம்





“நாங்கள் இருவரும் மது அருந்திவிட்டு அறையில் பாட்டு பாடி நடனமாடிக்கொண்டிருந்தோம். சிறிது நேரம் கழித்து அவளுக்கு ஒரு அழைப்பு வந்தது. அந்த அழைப்பை தொடர்ந்து அவள், அசிங்கமான விஷயங்களைச் செய்யாதே, நான் இப்போது சமூகத்தை எப்படி எதிர்கொள்வது என்று கத்த ஆரம்பித்தாள். திடீரென ஜன்னலுக்கு அருகில் இருந்த கதிரையில் ஏறி ஜன்னல் வழியாக குதித்துவிட்டார்” என களுத்துறையைச் சேர்ந்த 16 வயது மாணவியின் மர்மமான மரணம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபர் நேற்று முன்தினம் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இவர், நாட்டை விட்டு தப்பிச் செல்லும் நோக்கத்துடன் வாடகைக் காரில் பயணித்துக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் ஹிக்கடுவை பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் (09) கைதுசெய்யப்பட்டிருந்தார்.

சந்தேகநபர், படகு மூலம் நாட்டை விட்டு தப்பிச் செல்ல திட்டமிட்டிருந்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

களுத்துறை தெற்கு பகுதியில் அமைந்துள்ள விடுதியொன்றின் மூன்றாவது மாடியிலிருந்து கடந்த 6ஆம் திகதி மாலை 9.30 மணியளவில் குறித்த மாணவி கீழே விழுந்து மர்மமான முறையில் உயிரிழந்திருந்தார்.

களுத்துறை தெற்கு நாகொட பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய திஹார திரானி நிஷங்க சில்வா என்றழைக்கப்படும் மாணவியே இவ்வாறு உயிரிழந்திருந்தார்.

16 வயதான மாணவி, அவரது பாடசாலையில் கல்வி பயிலும் அயல்வீட்டிலுள்ள 19 வயதுடைய இன்னுமொரு மாணவியும் அவரது 21 வயதான காதலன் இஷான், 29 வயதான தனுஷ்க கயான் சஹபந்து ஆகியோரே குறித்த ஹோட்டலுக்கு பயணித்துள்ளனர்.

மாணவிகள் இருவரும் வயதில் குறைந்தவர்கள் என்பதால், உயிரிழந்த மாணவி, தனது 20 வயதான நண்பியின் அடையாள அட்டையை பயன்படுத்தியே ஹோட்டலுக்குச் சென்றுள்ளார்.

களுத்துறை, இசுரு உயன, பாலத்தோட்டையில் வாடகை வீட்டில் வசிக்கும் தனுஷ்க கயான் சஹபந்து இரண்டு திருமணம் செய்தவர் என்றும், அவர் முதல் மனைவியிடமிருந்து சட்ட ரீதியாக பிரியாமலேயே இன்னுமொரு பெண்ணுடன் வாடகை வீட்டில் வாழ்ந்து வந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த சிறுமியின் வீட்டுக்கு அருகில் 19 வயதான நண்பி வசித்துள்ளார். அவரது 21 வயதான காதலன் இஷானும், பிரதான சந்தேகநபரும் நண்பர்கள். இந்த ஜோடி மே 6ஆம் திகதி சந்திக்க முடிவு செய்துள்ளது.

“சம்பவ தினத்தன்று, எனது நண்பர் எனக்கு அழைப்பு விடுத்து வெளியில் சந்திப்போமா? இரு பெண்களும் இருக்கிறார்கள். இன்று சற்று களிப்புடன் இருக்கலாம் என்று தனக்கு அழைப்பு விடுத்ததாகவும் அந்த அழைப்பை மறுக்காமல் தானும் வெளியில் செல்ல இணக்கம் தெரிவித்ததாகவும் பிரதான சந்தேக நபரின் சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, நண்பர்கள் இருவரும் மதியம் 2.30 மணியளவில் காரில் வந்து குறித்த பெண்கள் இருவரையும் காரில் ஏற்றிக்கொண்டு நண்பருடன் பயணித்துக்கொண்டிருந்தபோது, பெண்கள் இருவரும் வீட்டில் அறிவித்து விட்டு வருவதாக தெரிவித்துவிட்டு மாலையில் வெளியில் செல்வோம் என்று கூறியதாகவும் அவர் சாட்சியமளித்துள்ளார்.

அதற்கமைய, அன்று மாலை இருவரையும் அழைத்துக்கொண்டு குறித்த ஹோட்டலுக்குச் சென்றதாகவும் உயிரிழந்த மாணவி இதற்கு முன்னர் தனக்கு அறிமுகமில்லாதவர் என்றும் அவர் பாடசாலை மாணவி என்பதை தான் அறிந்திருக்கவில்லை என்றும் பிரதான சந்தேகநபராக கருதப்படும் களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதாக கயான் தனுஷ்க சஹாந்து பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

“அன்று ஹோட்டலின் ஐந்தாவது மாடியில் அறையொன்றை முன்பதிவு செய்தோம். அதன்போது யுவதிகள் இருவரும் அடையாள அட்டை இரண்டை ஹோட்டல் பதிவாளர்களிடம் ஒப்படைத்திருந்தனர். இரண்டு அறைகளை முன்பதிவு செய்திருந்தாலும் நால்வரும் ஒரே அரையில் இருந்தே மது அருந்தினோம். சற்றுநேரத்தில் எனது நண்பரும் அவரின் காதலியும் மற்றைய அறைக்குச் செல்வதாக கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்கள். தொடர்ந்து நாங்கள் இருவரும் பாட்டு பாடி நடனமாடிக் கொண்டிருந்தோம். ஆனால், அவர் மாடியிலிருந்து கீழே விழும் வரை எங்களிடையே எவ்வித பாலியல் உறவும் இடம்பெற்றிருக்கவில்லை. நான் டவலொன்றை அணிந்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்திருந்தேன். அந்த பெண்ணும் நல்ல மது போதையிலேயே இருந்தார். அவர்கள் சென்று சிறிது நேரம் கழித்து, குறித்த பெண்ணின் தொலைபேசிக்கு அழைப்பொன்று வந்தது. அவரை அச்சுறுத்துவதற்காக வேறொரு நபர் அழைப்பெடுத்திருக்கிறார் என்பதை அவரின் நடவடிக்கைகளிலிருந்து புரிந்துகொண்டேன். அந்த அழைப்பு வந்தவுடன் அவரின் நடவடிக்கைகள் முழுமையாக மாறிவிட்டன.

குழப்பமடைந்திருந்தார். “அசிங்கமான வேலை செய்யாதே. எனது வாழ்வை சீரழித்து விட்டாய்” என்று அழைப்பில் பேசினார்.

குழப்பமடைந்திருந்த அந்த பெண் ஒரேடியாக அந்த அறையின் ஜன்னலுக்கு அருகிலிருந்த கதிரையின் மீது ஏறி ஜன்னலின் வழியாக வெளியில் குதித்து விட்டார். நான் அமர்ந்திருந்ததால் உடனடியாக செயற்பட்டு அவரை காப்பாற்ற முடியாமல் போய்விட்டது” என்று அவர் வாக்குமூலத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் தான் அவரின் சடலத்தைக் கூட பார்க்காமல் அங்கிருந்து வெளியேறிவிட்டதாகவும் நண்பருக்கு அழைப்பு விடுத்து நடந்த விடயத்தை குறிப்பிட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். “அவருக்கு அழைப்பு விடுத்தது யார் என்பது எனக்கு தெரியாது. ஆனால், யாரோ ஒருவர் அவரை அச்சுறுத்தியுள்ளனர் என்பதை அறிந்துக்கொண்டேன்” என்று அவர் பொலிஸாருக்கு மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய அழைப்பு விடுத்தவர் யார் என்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ள மற்றைய மாணவி அல்லது அவரின் காதலன் இந்த அழைப்பை விடுத்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மாணவியின் தொலைபேசியை சந்தேகநபர் ஆற்றில் வீசியுள்ளதாகவும் அதனை ஆற்றிலிருந்து எடுத்து அழைப்பு விடுத்தவர் யார் என்பதை அடையாளங் காணுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளதுடன் உயிரிழந்த மாணவிக்கு அடையாள அட்டையை பெற்றுக்கொடுத்த மாணவியை அழைத்து அவரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

அவர் சந்தேகநபருடன் பாலியல் உறவில் ஈடுபட்டிருக்கவில்லை என்று பிரேத பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார், இது கொலையா அல்லது அவராகவே ஜன்னலிலிருந்து விழுந்தாரா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

கொலையா அல்லது தற்கொலையா என்பது தொடர்பில் தொடர் விசாரணைகள் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.05.09
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5109 | ரூ. 18,249,603.00 | P | 8 9 2 7 2 8 |
| கொவிசெத | 3351 | ரூ. 102,015,240.64 | J | 49 54 72 75 |
| ஜாதிக சம்பத | 1564 | ரூ. 10,761,618.00 | வெற்றி இலக்கினம் | 5 7 0 0 3 4 |
| தன நிதானய | 1139 | ரூ. 89,123,572.40 | E | 04 20 36 67 |
| ராசி சுப பலன் Handahana | 418 | ரூ. 2,500,000.00 | வெற்றி இலக்கினம்: மீனம்; விசேட இலக்கினம்: மீனம் | 18 48 51 62 |
| மெகா பவர் | 1457 | ரூ. 319,984,778.00 | A; சுப்பர் இலக்கம் 24 | 22 38 54 58 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் சிறப்புற நடைபெற்ற திருக்குறள் விழா








முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் திருக்குறள் விழா நேற்றுமுன்தினம் (09) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

மாந்தை கிழக்கு பிரதேசத்துக்குட்பட்ட நலன்விரும்பிகளின் அனுசரணையுடன் பிரதேச செயலாளர் ந.ரஞ்சனா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டமையை தொடர்ந்து பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்த மாவட்ட செயலாளர் க.விமலநாதன் திருவள்ளுவர் சிலைக்கு மலர்மாலையினை அணிவித்து விழாவை ஆரம்பித்து வைத்தார்.

மேலும் சமநேரத்தில் திருவள்ளுவர் தோற்றத்துடன் நிகழ்வுக்கு வருகை தந்திருந்த பள்ளிச் சிறுவன் பல்லக்கில் தூக்கி வரப்பட்டு நிகழ்வு நடைபெற்ற மாநாட்டு மண்டபத்துக்கு விருந்தினர்களுடன் அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து குறள்வாழ்த்து இசைக்கப்பட்டதனைத் தொடர்ந்து மங்கல விளக்கினை பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் விமலநாதன், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்த மேலதிக மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ம.கிரேசியன் வில்வராஜா, கௌரவ விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்த பொறியியலாளர் வவுனிக்குளம் கை.பிரகாஸ் மற்றும் மு/பாலிநகர் மகா வித்தியாலய அதிபர் ஸ்ரீகமலநாதன் ஆகியோர் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து ஏனைய அதிதிகளும் மங்கல விளக்கினை ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து இடம்பெற்றதைத் தொடர்ந்து ஆரணி நர்த்தனாலய மாணவர்களின் வரவேற்பு நடனமும் மாணவர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெற்றன.

தொடர்ந்து மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பொதுமக்கள், சமூக மட்ட அமைப்பினர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# போலி நாணயத்தாள் அச்சிடும் இயந்திரத்துடன் இளைஞர் கைது

## யாழ்.நகரில் சம்பவம்

போலி நாணயத்தாள்களை அச்சிடும் மின்னியல் இயந்திரத்துடன் 18 வயது இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக 1.3 மில்லியன் ரூபா பெறுமதியிடப்பட்ட போலி நாணயத்தாள்களுடன் பளையில் வைத்து இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இந்த சந்தேக நபருடன் தொடர்புடைய இளைஞரே யாழ்ப்பாணம் நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வீதியில் பெண்கள் தங்கும் இல்லத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மின்னியல் அச்சு இயந்திரத்தை செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் வேறு இடத்துக்கு மாற்ற முற்பட்டவேளை இளைஞர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

பளை பகுதியில் வைத்து கடந்த வாரம் போலி நாணயத்தாள்களுடன் கைது செய்யப்பட்டவருக்கும் யாழ்ப்பாணம் நகரில் கைது செய்யப்பட்டவருக்கும் தொடர்புள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். சந்தேக நபரை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட மன்று வழக்கு விசாரணைகளை குற்ற விசாரணைப் பிரிவுக்கு (சிஐடி) மாற்ற அனுமதியளித்தது.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தின் கட்டளையில் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தது.

# கிளிநொச்சியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு ஆரம்பம்




(மு.தமிழ்ச்செல்வன்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று (10) கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன் ஏ 9 வீதியில் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியினை எமது உறவுகளுடன் பரிமாறி எமது இனம், இன அழிப்புக்குள்ளான வரலாற்றினையும் வலிகளையும் எமது இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளோம் என பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# காணொளி எடுத்து பல்கலை மாணவர்களுக்கு அச்சுறுத்தல்

## இராணுவ செயற்பாட்டால் விசனம்

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டத்தின்போது சாவகச்சேரி பகுதியில் இராணுவத்தினர் புகைப்படமெடுத்து அச்சுறுத்தும் பாணியில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி சந்தை கட்டிடத்தொகுதியின் மேல் தங்கியுள்ள இராணுவத்தினரே இவ்வாறு இராணுவ சீருடை மற்றும் சிவில் உடையுடன் புகைப்படமெடுத்து அச்சுறுத்தல் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக மலையக புகையிரத சேவைகள் பாதிப்பு



(எஸ். கணேசன்)

புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் ஆரம்பித்த வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக நேற்று நள்ளிரவு முதல் மலையகத்துக்கான சகல புகையிரத சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் புகையிரதத்தில் பயணம் செய்யும் மாணவர்கள், அரச ஊழியர்கள் உட்பட பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக, மலையக பகுதியில் உள்ள புகையிரத நிலையங்களின் கதவுகள் யாவும் பூட்டப்பட்டிருந்ததுடன், பயணிகள் ஓய்வு அறை, உணவகம் உட்பட அனைத்தும் பூட்டப்பட்டிருந்தன.

ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளான அதிகாரி ஒருவருக்கு பிரதிப் பொது முகாமையாளர் நியமனம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, இந்த புகையிரத நிலைய அதிபர்கள் சங்கம் நள்ளிரவு முதல் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் அடையாள வேலை நிறுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களை ஏற்றிச் செல்வதற்காக மலையக பஸ்தரிப்பு நிலையங்களில் பல தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# ‘மலையகம் 200’ விசேட நிகழ்வு நுவரெலியாவில் நடத்த ஏற்பாடு

(ஆ.ரமேஸ்)

இந்திய வம்சாவளிகளாக இலங்கையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களாக 1823ஆம் ஆண்டு முதல் இப்போது 2023ஆம் ஆண்டு நடப்பு காலம்வரை 200 வருட கால வரலாற்றை கொண்டு வாழும் மலையக மக்களை நினைவு கூர்ந்து கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம் நுவரெலியாவில் மாபெரும் நிகழ்வுகளை நடத்த ஏற்பாடுகளை செய்துள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 20ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை நுவரெலியா சினிசிட்டா உள்ளரங்கு மற்றும் வெளியரங்கில் பல விசேட நிகழ்வுகளை நடத்த நிறுவகம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த விசேட நிகழ்வுகளில் மலையக மக்களின் வாழ்வியல் வரலாறு, அரசியல், பொருளாதாரம், தொழில் மற்றும் உரிமைகள் போன்ற விடயங்களை வெளிக்காட்டும்வகையில் ஆய்வரங்கு, தோட்டத் தொழிலாளர்களின் அருங்காட்சியக கண்காட்சி போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் வீட்டுரிமை, காணியுரிமை, தபால் சேவை, அனர்த்த முகாமைத்துவ நிறுவனத்தின் சேவைகள் உட்பட பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபைகள் அதிகரிப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் கோரிக்கைகளை வலியுறுத்தி கையொப்பம் திரட்டல் மற்றும் மகஜர் சமர்ப்பித்தல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

முக்கிய அதிதிகளின் பங்காற்றலுடன் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில், மேலும் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்துடன் இணைந்து அடிப்படை ஆவணங்களை பெற்றுக் கொள்ளும் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

அத்துடன் இணைந்து இளைஞர், யுவதிகளும் தொழில் பயிற்சி வழிகாட்டல் செயலமர்வுகளும் இடம்பெறுவதுடன், தென்னிந்திய பாடகர் (ஏஞ்சாமி) புகழ் அறிவு அவரின் இசை நிகழ்ச்சியும் மலையக பாரம்பரிய கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை நடைபெறுவதாக கண்டி சமூக அபிவிருத்தி நிறுவக நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் யோகேஷ்வரி கிருஷ்ணன் தெரிவித்தார்.

# சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகள் எண்ணிக்கையை குறைக்கும் சதி

(எம்.எஸ்.எம். மஸாஹிம்)

## எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை தொடர்பில் மாத்தளை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஹாரிஸ் குற்றச்சாட்டு

எல்லை நிர்ணயக் குழுவின் முடிவுகள் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உள்ளூராட்சி மன்றங்களில் இதுவரை இருந்த தமிழ், முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை முற்றாக குறைப்பதற்கு திட்டமிட்டு செயற்படுத்தும் ஒரு சூழ்ச்சியாகுமென மாத்தளை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சியாட் எம். ஹாரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தேர்தல் ஆணையாளராக பக்கச்சார்பின்றி அரசியல் கலப்படமின்றி நடுநிலையாக செயல்பட்ட மஹிந்த தேசப்பிரிய ஒரு சிறந்த அதிகாரியும் மக்களை புரிந்து செயற்படக்கூடியவரும் என்பதை அவரது கடந்த கால நடவடிக்கைகள் நிரூபித்திருந்தன.

என்றாலும் எல்லை நிர்ணய விடயத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் நடுநிலைமை சாராது அரசினதோ அல்லது வேறெந்த சக்தியினதோ கையாளாக மாறிவிட்டாரோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இதற்கு முக்கிய காரணம் கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் பிரதிநிதிகளாக செயற்பட்ட தமிழ், முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் எதிர்காலத்தில் முற்றாக இல்லாமல் போய்விடும் ஒரு ஆபத்தான தேர்தல் எல்லை நிர்ணய அறிக்கையையே மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான குழுவினர் வெளியிட்டுள்ளனர்.

உதாரணமாக, கடந்த கால உள்ளூராட்சி மன்றங்களின்போது மாத்தளை மாநகர சபையில் வட்டார தேர்தல் முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட போது 13 வட்டாரங்களில் இருந்து தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் ஆறுபேர் தெரிவு செய்யப்பட்டனர். நல்லாட்சியின் போது மாத்தளை மாநகர சபையில் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 21 ஆக அதிகரிக்கப்பட்ட அதேவேளை, முஸ்லிம் உறுப்பினர்கள் 6 பேரும் தமிழ் உறுப்பினர்கள் 3 பேருமாக மொத்தம் 9 சிறுபான்மை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



என்றாலும் மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான எல்லை நிர்ணயக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் மாத்தளை மாநகர சபைக்கு இரண்டு முஸ்லிம் பிரதிநிதிகளும் ஒரு தமிழ்ப் பிரதிநிதியுமாக மொத்தம் மூன்று உறுப்பினர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட வாய்ப்புகள் உண்டு. இது தமிழ், முஸ்லிம் மக்களின் குரலை உள்ளூராட்சி மன்றங்கள் மூலமாக நசுக்கிட செய்யும் திட்டமிட்ட செயலாகும் என்றார்.

# சிசுவை கைவிட்டுச் சென்ற தாயார் வத்தேகமவில் கைது

(கண்டி செய்தியாளர்)

தனது நான்கு நாள் சிசுவை புத்தர் சிலைக்கு அருகில் கைவிட்டுச் சென்ற தாய் ஒருவரை வத்தேகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வத்தேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்கடுவ வீதியில் அமைந்துள்ள சின்னமோல பிரதேசத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

தான் பிரசவித்த சிசுவை தனது பிள்ளை அல்ல என்று கணவன் நிராகரித்ததன் காரணமாகவே தான் அவ்வாறு புத்தர் சிலைக்கு அருகில் கைவிட்டுச் சென்றதாக பொலிஸாரிடம் தாயார் வாக்குமூலம் அளித்துள்ளார்.

கண்காணிப்புக் கெமராக்களின் உதவியுடன் கைதுசெய்யப்பட்ட 37 வயதுடைய பெண் இரண்டு குழந்தைகளின் தாய் எனத் தெரியவந்துள்ளது. இவர் லொறி ஒன்றில் வந்து தனது சிசுவை கைவிட்டுச்சென்றமை அங்கிருந்த கண்காணிப்புக் கெமராவில் பதிவாகியுள்ளது.

இதேவேளை, கைது செய்யப்பட்டுள்ள சிசுவின் தாய், சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் மாத்தளை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி தேசிய வைத்தியசாலையில் சிசு வைக்கப்பட்டுள்ளதுடன், அப்பெண்ணை தெல்தெனிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

# கல்வி, நிலையான தர்மம் மூலமே மனித சமூகம் மேன்மையடைகிறது

## அஷ்ஷேக் அனஸ் முஹம்மத்







(கண்டி நிருபர்)

கல்வி அபிவிருத்தி மூலமே மனித சமூகம் மேன்மையடைகிறது. நிலையான தர்மங்களைச் செய்து அதனை மேலும் பயன் மிக்கதாக மாற்ற வேண்டும் என்று கம்பளை உடபலாத்த பிரதேச காதி நீதவான் அஷ்ஷேக் அனஸ் முஹம்மத் (நளீமி) தெரிவித்தார்.

வத்துகாமம் கல்வி வலயத்திலுள்ள கும்புக்கந்துறை அல்ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தால் "மீண்டும் பாடசாலை " என்ற ஒரு வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அந்நிகழ்வில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,வரலாறுகள் முழுவதும் மனித சமூகம் கல்வி அறிவின் ஊடாக வெற்றியடைந்துள்ளமை நிதர்சனமான உண்மையாகும். அண்மைக்காலம் வரை உலகாதாய ரீதியான சகல வெற்றிகளையும் கல்வி அறிவு மூலம் மனிதன் அடைந்து கொண்டதைக் காண்கிறோம். நிலையான தர்மங்களைச் செய்வதன் ஊடாக ஈருலகிலும் வெற்றியடைய முடியும்.

நிலையான தர்மம் என்பது காலத்தால், நேரத்தால் அல்லது இயற்கை அழிவுகளால் அழியாத தர்மங்களாகும். அதில் மிக முக்கியமானது கல்விக்காக நாம் செலவிடும் பணமாகும். இது காலமெல்லாம் நிலைத்து நிற்கக் கூடியது.

எனவே எமது எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்வுக்கு நாம் நிலையான தர்மங்களில் ஒன்றான கல்வி அபிவிருத்திக்கு கூடுதல் தர்மங்களைச் செய்ய வேண்டும்.

அவ்வாறான தர்மங்களுக்கு ஏனைய தர்மங்களை விட பல மடங்கு நன்மைகளை அதிகமாக வழங்குவதாக இஸ்லாமிய கண்ணோட்டத்தில் பார்க்க முடிகிறது. ஆகக் குறைந்தது ஒன்றுக்கு எழுபது அல்லது எழு நூறு என்ற விகிதத்தில் நன்மைகள் கிடைப்பதாக இஸ்லாம் வலியுறுத்துகிறது. எனவே நிலையான தர்மங்களில் ஒன்றான கல்விக்கு வாரி வழங்குங்கள் என்றார்.

பாடசாலை அதிபர் அஷ்ஷேக் எம்.எப்.எம். றசாத் (நளீமி) தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் பழைய மாணவர் சங்கத்தால் 40 மில்லியன் ரூபா நிதி பாடசாலை அபிவிருத்திக்காக கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு நோயினால் 60 பேர் பாதிப்பு

(கண்டி நிருபர்)

தம்புள்ளை வைத்தியசாலை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர்களுள் வைத்தியசாலை ஊழியர்களும் அடங்குவதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

தம்புள்ளை வீர டென்சில் கொப்பேகடுவ ஞாபகார்த்த வைத்தியசாலையில் பணிபுரிபவர்களும் அதனை அண்மித்த பகுதியில் வசிப்பவர்களுமாக சுமார் 60 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

இவ்வைத்தியசாலை அருகில் ஓடும் சிற்றாரு மிகவும் அசுத்தமடைந்து தேங்கி நிற்பதால் இதுவே டெங்கு நோய் பரவ முக்கிய காரணமாக இருக்கலாம் எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# அதிசொகுசு வாகனத்தில் கேரள கஞ்சா

## மூவர் கைது



(கண்டி நிருபர்)

அனுராதபுரத்தில் இருந்து கண்டி நோக்கி சென்ற அதிசொகுசு மோட்டார் வாகனத்தில் இருந்து பெருந்தொகை கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதாக கட்டுகஸ்தோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பகோட்டையிலுள்ள விசேட அதிரடிப்படை பொலிஸ் படையினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் படி கண்டி- மாத்தளை பிரதான வீதியில் குடுகல என்ற இடத்தில் குறித்த காரை வழிமறித்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது அதனுள் பெருந்தொகை கேரள கஞ்சா இருந்தமை தெரியவந்துள்ளது.அதனை அடுத்து மேற்படி வாகனம் மற்றும் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டதுடன் சாரதி உட்பட மூவர் கைது செய்யப்பட்டு கட்டுகஸ்தோட்டைப் பொலிஸாரிடம் அதிரடிப் படையினரால் ஒப்படைக்கப்பட்டனர். கட்டுகஸ்தோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.









எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பரவலுக்குள்ளான சம்பவம் தொடர்பான வழக்கை சிங்கப்பூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை கண்டித்து சோசலிச இளைஞர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று நேற்று (10) பத்தரமுல்லை, பொல்துவ சந்தியில் இடம்பெற்றது.

(படப்பிடிப்பு – லலித் பெரேரா)

# உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம்; சான்றுரைப்படுத்தினார் சபாநாயகர்



இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆவது இலக்க உறுப்புரையின் பிரகாரம் 2023 மே 08 ஆம் திகதி உண்ணாட்டரசிறை (திருத்தம்) எனும் சட்டமூலத்தை சான்றுரைப்படுத்தியதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (10) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இந்தச் சட்டமூலம் கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய சபாநாயகர் சான்றுரைப்படுத்தியதை அடுத்து உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம் 2023 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமாக நடைமுறைக்கு வருகின்றது.

# தெஹிவளை - கௌஸிய்யாஹ்வில் முப்பெரும் விழா

தெஹிவளை - அல் ஜாமிஅதுல் கௌஸிய்யாஹ் அரபு பயிற்சிக் கல்லூரி மற்றும் இஸ்லாமிய நூலகத்தின் வெள்ளி விழா, 11 ஆவது பட்டமளிப்பு விழா, 18 ஆவது தலைப்பாகை சூட்டு விழா ஆகிய சிறப்பு நிகழ்வுகள் உள்ளடங்கிய முப்பெரும் விழா எதிர்வரும் (13) சனிக்கிழமை மாலை 3.45 மணி முதல் அல் ஜாமிஅதுல் கௌஸிய்யாஹ் அரபுக் கல்லூரி மண்டபத்திலும் (14) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி முதல் தெஹிவளை - ஈகல் லேக் சைட் பாதுகாப்புப் படையினரின் வரவேற்பு மண்டபத்திலும் இடம்பெறவுள்ளன.

இச்சிறப்பு நிகழ்வில் பிரதம அதிதிகளாக அஸ்ஸெய்யித் நகீப் மௌலானா, அஸ்ஸெய்யித் நஜீப் மௌலானா மற்றும் கௌரவ அதிதிகளாக அல் ஜாமிஅதுல் கௌஸிய்யாஹ் தலைவர் எம்.எச். ஹாஜா ஹுஸைன், அஸ்ஸெய்யித் ஏ.ஐ. அனீஸ் பூக்கோயாத் தங்கள், அஸ்ஸெய்யித் ஏ.ஐ. உவைஸ் பூக்கோயாத் தங்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தியா - தமிழ்நாடு ஜாமிஆ அல் அன்வாருல் குத்ஸிய்யா அரபுக் கல்லூரியின் துணை முதல்வர் மௌலவி அஃப்ழலுல் உலமா ஜே.எம். ஜைனுல் ஆபிதீன் (மஹ்ழரி) சிறப்புரை நிகழ்த்தும் இச்சிறப்பு நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக ஸாதாத்துமார்கள், கௌஸிய்யாஹ் கல்லூரி நிர்வாகிகள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், முரீதீன்கள், முஹிப்பீன்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அன்றைய தினம் (2019) ஆலிம்கள் 6 பேரும் (2021) ஆலிம்கள் 15 பேரும் (2022) ஆலிம்கள் 16 பேரும் (2020) ஹாபிழ்கள் 4 பேரும் (2021) ஹாபிழ்கள் 6 பேரும் (2022) ஹாஃபிழ்கள் 11 பேரும் மௌலவி மற்றும் ஹாஃபிழ் பட்டங்களைப் பெறவிருப்பதோடு மாணவர்கள் 6 பேரும் தலைப்பாகை சூடி கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





ஈரான் அரசாங்கம் 1.8 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருந்துப் பொருட்களை இலங்கைக்கு உதவியாக வழங்கியது. இம்மருந்துப் பொருட்களை ஈரான் நாட்டுத்தூதுவர் ஹசாம் அஸ்ஜாசதா சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெலவிடம் கையளித்தார். (அஷ்ரப் ஏ. சமத்)

# கலஹா பிரதேச வைத்தியசாலைக்கு கடதாசி உறைகள் அன்பளிப்பு



(கலஹா செய்தியாளர்)

நாட்டிலுள்ள அநேக அரச வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கான மருந்துகளை பொதியிடுவதற்கான கடதாசி உறை தட்டுப்பாடு தொடர்பாக ஊடகத்தில் செய்தி வெளியானது. இதற்கிணங்க பாடசாலைகள் உட்பட பொது அமைப்புக்கள் பலவும் முன்வந்து கடதாசி உறை தயாரித்து கொடுக்கும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கலஹா பிரதேச பாடசாலை ஒன்றில் தரம் மூன்றில் கல்வி கற்கும் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஒரு தொகுதி கடதாசி உறைகளை கலஹா பிரதேச வைத்திய சாலையின் பொறுப்பதிகாரி வைத்தியர் ருவன் ரவீந்திரநாத்திடம் மாணவர்கள் நேற்றுமுன்தினம் 09) கையளித்தனர்.

## சீனன் கோட்டைக்கு

# ரயீஸுல் முகத்தமீன்கள், முகத்தமீன்கள் நியமனம்

(பேருவளை செய்தியாளர்)

ஷாதுலிய்யா தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய செய்ஹூஸ் ஸஜ்ஜாதா சேஹூ நாயகம் முஹம்மத் மஹ்தி அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி நாயகம் அவர்களினால் பேருவளை, சீனன்கோட்டை பகுதி பள்ளிவாசல்கள் மற்றும் ஷாதுலி ஸாவியாக்களுக்கு ஷாதுலிய்யா தரீக்காவின் ரயீஸுல் முகத்தமீன்கள் மற்றும் முகத்தமீன்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொழும்பு உம்மு ஸாவியாவில் இடம்பெறவுள்ளது. உம்மு ஸாவியா நிர்வாக சபைத் தலைவர் தேசபந்து மக்கி ஹாஷிம் தலைமையில் இடம்பெறும் இதுதொடர்பான நிகழ்வில் கலீபதுல் குலபா அஷ் ஷாதுலி மௌலவி எம்.இஸட். முஹம்மத் ஸூஹூர் (பாரி) கடிதங்களை கையளிப்பார்.

நியமிக்கப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு :

மௌலவி எம்.டப்ளியு. எம். பஹ்ருத்தீன் மிஸ்பாஹி ரயீஸுல் முகத்தமுல் ஷாதுலி, எம். எம். ஹம்ஸா ரயீஸுல் முகத்தமுஷ் ஷாதுலி ,மௌலவி எஸ். எச். எம். இம்றான் ஹாபிஸ் , முகத்தமுஷ் ஷாதுலி, (பெருகமலை ஜும்ஆ மஸ்ஜித்),மௌலவி எம். அஸாத் அஜ்வாதி முகத்தமுஷ்ஷாதுலி (நூராணிய்யா ஸாவியா மஸ்ஜித் கங்கானன்கொட) , மௌலவி அம்ஜத் ஸாலி ஜவ்பர் அஷ்ஷாதுலி முகத்தமுஷ்ஷாதுலி (குட்டிமலை ஜும்ஆ மஸ்ஜித்), மௌலவி பைஸான் ஹில்மி அஷ்ஷாதுலி முகத்தமுஷ்ஷாதுலி,(பிட்டவல ஸாவியா), எம் .ஜே. எம். ரம்ஸீன் டாலின் முகத்தமுஷ் ஷாதுலி (பிட்டவல ஸாவியா), எம் .ஜே. எம். அரூஸ்தீன் முகத்தமுஷ்ஷாதுலி.(பிட்டவல ஸாவியா), ஏ.எச். எம். நஸீர் முகத்தமுஷ் ஷாதுலி (பிட்டவல ஸாவியா),எம். டி.எம். அரூஸ் முகத்தமுஷ்ஷாதுலி (மஸ்ஜித் அபுல் ஹஸன் ஷாதுலி ஸாவியா குமஸ்தர் லேன்).

# பொலிஸ் உத்தியோகத்தர்களது கடமைக்கு இடையூறு

## இருவர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

பொலிஸ் உத்தியோகத்தர்களது கடமைக்கு இடையூறு விளைவித்து அவர்களை தாக்கி காயப்படுத்தியதாகக் கூறப்படும் மூவரை சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளதாக ஹொரவப்பொத்தான பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கபுகொள்ளேவ பொலிஸ் பிரிவின் அலியாகட பகுதியில் 09 ஆம் திகதி இடம்பெற்றதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் 21,23,24 வயதுகளையுடைய கபுகொள்ளேவ, அலியாகட பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

முறைப்பாடு ஒன்றினை விசாரணை செய்வதற்காக சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

இதன்போது காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் கபுகொள்ளேவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரவப்பொத்தான பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# இஸ்மாயில்புரம் சுனாமி வீடமைப்புத்திட்ட வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(இஸ்மாயில்புரம் செய்தியாளர்)

இஸ்மாயில்புரம் சுனாமி வீடமைப்புத்திட்ட கிராமத்திலுள்ள வீதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் அங்கு வாழும் மக்கள் அவ்வீதியூடாக போக்குவரத்துச் செய்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

சுனாமி அனர்த்தத்தினால் முற்றாகப் பாதிக்கப்பட்டு சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இஸ்மாயில்புரம் வீடமைப்புத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டுள்ள இம்மக்கள் தற்போது அடிப்படை வசதிகள் எதுவுமின்றி மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருவதுடன் நாளாந்த ஜீவனோபாயத்துக்காகவும் சிரமப்படுகின்றனர்.

இந்நிலையில் அங்குள்ள வீதிகளும் முற்றாக சேதமடைந்துள்ளது. மழை காலங்களில் இவ்வீதியில் பயணம் செய்ய முடியாதுள்ளது. இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள், பெண்கள் மற்றும் பாதசாரிகள் சொல்லொணாத் துயரங்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.நாட்டிலுள்ள பெரும்பாலான கிராமிய வீதிகள் நவீனமயப்படுத்தப்பட்டு வரும் சூழ்நிலையில் தமது கிராமம் மட்டும் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இது விடயமாக சம்மாந்துறை பிரதேச சபை, பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் பிரதேச அரசியல்வாதிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# நாணய மாற்று விதம் (10.05.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 209.0854 | 221.4056 |
| கனேடியன் டொலர் | 230.6986 | 244.3303 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 44.0876 | 47.4813 |
| யூரோ | 340.0875 | 358.0975 |
| ஜப்பான் யென் | 2.2945 | 2.4137 |
| சிங்கப்பூர் டொலர் | 233.0857 | 246.1825 |
| ஸ்ரேலிங் பவுன் | 391.5681 | 411.5281 |
| சுவிஸ் பிராங் | 346.5254 | 367.8554 |
| ஐ.அ. டொலர் | 310.9048 | 324.8084 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 843.6754 |
| குவைட் | குவைட் தினார் | 1,037.5663 |
| ஓமான் | ஓமான் றியால் | 826.1563 |
| கட்டார் | கட்டார் றியால் | 86.8769 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 84.8186 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 86.6226 |

## ஆலையடிவேம்பு பிரதேச விவசாய குழுக்கூட்டம்

# மானிய பசளை உள்ளிட்ட அனைத்து கொடுப்பனவுகளும் வழங்க தீர்மானம்





(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் விவசாய செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் அனைவருக்கும் மானிய பசளை உள்ளிட்ட அனைத்து கொடுப்பனவுகளும் வழங்கப்படும் என பிரதேச விவசாய குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் நேற்று புதன்கிழமை(10) இடம்பெற்ற பிரதேச விவசாய குழுக்கூட்டத்தில், தம்பிலுவில் பிரதி நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் பி.விகர்ணன், ஆலையடிவேம்பு பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஹுசைன்டீன், அக்கரைப்பற்று கிழக்கு பெரும்போக உத்தியோகத்தர் சம்சுடீன், தம்பிலுவில் பிரதி நீர்ப்பாசனத் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் சேந்தன் உள்ளிட்ட அதிகாரிகள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், விவசாய பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதேச செயலாளர், வீணாக நீர் வெளியேற்றத்தை தடுத்து விவசாய செய்கைக்கு தேவையான நீரை வழங்குவதுடன் விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தி அவர்களை பாதுகாப்பது அரச அதிகாரிகளின் கடமை என்பதுடன் அதனையே தாம் கடைப்பிடிப்பதாகவும் கூறினார்.

தம்பிலுவில் பிரதி நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் பி.விகர்ணன் உள்ளிட்டவர்களும் உரையாற்றியதுடன் விவசாயிகளின் தேவைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டனர்.

விவசாய செய்கையை மேற்கொண்டுள்ள அனைவரும் இணைந்து யானைக்காவல் செய்கின் றவர்களுக்கான கொடுப்பனவை வழங்குதல், சாந்திபுரம் செல்லும் வீதியை விவசாய அமைப்புகளின் நிதிப்பங்களிப்புடன் சீரமைத்தல், நிலத்தடி நீரை பாதுகாக்கும் முகமாக சின்னமுகத்துவாரம் அகழ்வை தொழில்நுட்ப உத்தியோகத்தரின் தொழில்நுட்ப கருத்துக்கு அமைய தடை செய்தல், அலிக்கம்பை கிராமத்தை சூழ்ந்துள்ள சிறு பற்றைகளை பொதுமக்கள் மற்றும் விவசாய அமைப்பு பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன் அகற்றுதல் போன்ற தீர்மானங்களும் இதன்போது நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பொத்துவிலில் நடமாடும் சேவைமூலம் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு





(அட்டாளைச்சேனை செய்தியாளர்)

பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் பொத்துவில் பிரதேச செயலகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நடமாடும் சேவை செவ்வாய்க்கிழமை(09) மாலை பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் சட்டத்தரணி பிர்னாஸ் இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.முஸாரப் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்நடமாடும் சேவையின்போது நீண்டகாலமாக தீர்த்து வைக்கப்படாமல் காணப்பட்ட பல்வேறு திணைக்களங்களின் சேவைகள் ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகள் துறைசார்ந்த அதிகாரிகளால் பெற்றுக் கொடுக் கப்பட்டன.

பிரதேச செயலகத்தின் கீழுள்ள அரச நிறுவனங்கள் மூலம் தீர்க்கப்பட வேண்டிய மக்களின் பல்வேறு பிரச்சினைகள் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன் உள்ளூராட்சி மன்றம், சுகாதாரத் திணைக்களம், சட்ட உதவி ஆணைக்குழு, வன இலாகா திணைக்களம், நில அளவைத் திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு துறைசார் நிறுவனங்கள் மூலம் மக்களின் பிரச்சினைகள் கேட்டறியப்பட்டு அவற்றுக்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

சில பிரச்சினைகளுக்காக உடனடித் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் இதன்போது மேற்கொள்ளப்பட்டன.

நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருந்த காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு காணி உத்தரவுப் பத்திரங்கள் மற்றும் அளிப்புக் காணிப் பத்திரங்கள் போன்றன சுமார் 65 பேருக்கு இதன்போது பெற்றுக்கொடுக்கப்பட்டன.

காட்டு யானைகளின் தாக்குதலுக்கு இலக்கான குடும்பத்தவர்களுக்கு நிவாரணக் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், வலது குறைந்தோருக்கான உபகரணங்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான போசாக்கு உணவுப் பொதிகள், பாடசாலை மாணவர்களுக்கான உதவிகள், விளையாட்டுக் கழகங்களுக்கான உபகரணங்கள் போன்றனவும் இதன்போது வழங்கப்பட்டன.

உளவள ஆலோசனைகள், சுகாதாரத்துறை ஆலோசனைகள், வழிகாட்டல்கள் போன்றனவும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நீண்ட காலமாக தீர்த்து வைக்கப்படாமல் காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு முன்னின்று செயற்பட்ட அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.முஸாரப், பிரதேச செயலாளர் சட்டத்தரணி பிர்னாஸ் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் ஆகியோருக்கு பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

## ‘நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல்’

# முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு



(மட்டக்களப்பு செய்தியாளர்)

சமூகங்களுக்கிடையிலான சமாதானத்தையும் சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் தொடர்ந்து பேணி வருவதற்காக தேசிய சமாதானப் பேரவை அமுல்படுத்தும் மாவட்ட சர்வமதப் பேரவையின் செயற்பாடுகளை எதிர்வரும் ஆண்டும் செயற்படுத்துவதற்கான திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் செயலமர்வு மட்டக்களப்பில் நேற்று புதன்கிழமை (10) இடம்பெற்றது.தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவைக்கான இணைப்பாளர் ஆர்.மனோகரன் தலைமையில் மட்டக்களப்பு கூட்டுறவுக் கட்டடத் தொகுதியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இச்செயலமர்வில், சர்வமத சமூகங்களைச் சேர்ந்த மாவட்ட சர்வமதப் பேரவை உறுப்பினர்களும் அதன் சமாதான செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வில் இன ஐக்கியத்தை கட்டிக்காக்கும் விடயங்கள் பற்றிய கரிசனைகள் முன்வைக்கப்பட்டன. சமூக நல்லுறவு, சகவாழ்வு, நல்லிணக்கம், சமாதானம் ஆகியவற்றோடு வாழும் எதிர்கால இளம் சமூகத்தை உருவாக்குவதோடு சமாதானத்தைச் சீர்குலைக்கும் எந்த நடவடிக்கையையும் முன்கூட்டியே அறிந்து அவை வன்முறை நிலைமாற்றத்துக்கான பன்முக நடவடிக்கைகள் செயற்றிட்டத்தின் கீழ் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டதாக இணைப்பாளர் மனோகரன் தெரிவித்தார்.



மருதமுனை கடற்பரப்பில் பெருமளவிலான மீன்கள் செவ்வாய்க்கிழமை(09) பிடிக்கப்பட்டன. நீண்டகால இடைவேளைக்குப் பின்னர் பல இலட்சம் பெறுமதியான மீன்கள் பிடிக்கப்பட்டமை குறித்து மீனவர்கள் சந்தோஷத்திலுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மருதமுனை செய்தியாளர்)





“வரலாறு வாழ்வோடு இணைந்ததாக” எனும் தொனிப்பொருளில் கல்முனை வலயக் கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்து நடத்திய கண்காட்சி இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தில் நேற்று புதன்கிழமை(10) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் ,கௌரவ அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம். ஜாபீர், ஜிஹானா ஆலிப், அதிபர் ஏ.ஜி.எம். றிஸாட் ஆகியோர் கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டனர். (எருவில் செய்தியாளர்)

# காற்றுடன் கூடிய மழை; மீன்பிடிப் படகுகள் சேதம்



(கல்லடி செய்தியாளர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக பல்வேறு பகுதிகளில் காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்து வருகிறது. இந்நிலையில், மட்டக்களப்பு, கல்லடி பகுதியில் செவ்வாய்க் கிழமை(09) மதியம் ஏற்பட்ட பலத்த காற்றுடனான மழை காரணமாக கல்லடி கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகுகள் மற்றும் தோணிகள் என்பன சேதமடைந்துள்ளன.

கரையிலிருந்து சற்று மேல் நோக்கி வைக்கப் பட்டிருந்த தோணி மற்றும் படகுகள் காற்றின் வேகம் காரணமாக கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் மீனவர்களினால் குறித்த படகுகள் மீட்கப்பட்டு கரையில் வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு, கடற்கரை அருகில் இருந்த தென்னை மரம் ஒன்று முறிந்து விழுந்துள்ளதுடன் கடற்கரைப் பகுதியில் காணப்படும் உணவகம் ஒன்றின் மீது பாரிய சவுக்கு மரம் ஒன்றும் வீழ்ந்துள்ளது. இதனால் குறித்த உணவகம் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. அம்மரத்தை கிராமவாசிகள் ஒன்றிணைந்து அகற்றினர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திராய்க்கேணியில் நடமாடும் சேவை

(திராய்க்கேணி செய்தியாளர்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட் பட்ட திராய்க்கேணி கிராமத்தில் இன்று வியாழக்கிழமை(11) அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமது ஷாபிர் தலைமையில் நடமாடும்சேவை இடம்பெறவுள்ளது. இதன்போது பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ் மற்றும் காணி விவகாரம் சம்பந்தமான விடயம், சமூர்த்தி கொடுப்பனவு, முதியோர் கொடுப்பனவு, ஆள் அடையாள அட்டை போன்றவற்றுக்கான தீர்வுகளும் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன.மேலும் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய திணைக்களத் தலைவர்களும் கலந்து கொள்வதோடு அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம், சுகாதார வைத்திய சேவை, நீர் வளங்கல் சேவை போன்ற பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதாக உதவி பிரதேச செயலாளர் நகிஜா முசாபீர் தெரிவித்தார்.

# திருமலையில் மழை; மின்சாரமும் துண்டிப்பு



(கிண்ணியா செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளில் வீசிய பலத்த காற்றுடன் கூடிய மழையினால் பல்வேறு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்ததுடன் மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருந்தது.

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள பட்டிமேடு, புதுக்குடியிருப்பு மற்றும் குன்சப்பந்திடல் ஆகிய பகுதிகளிலுள்ள பல வீடுகளும் பயன்தரு மரங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், மின் கம்பம் சேதமாகியதால் சுமார் இரு மணித்தியாலங்கள் மின் தடைப்பட்டிருந்தது. பின்னர் மின்சார சபை மூலமாக சீர் செய்யப்பட்டு மீண்டும் வழமைக்கு திரும்பியது.

தென்னை, வாழை, பலா உள்ளிட்ட மரங்கள் முறிந்து வீட்டுக்கூரைகளும் சேதமடைந்தன.

சுமார் ஐந்துக்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த காற்றுடன் கூடிய மழையினால் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




திருகோணமலை ரோட்டறிக்கழக 44ஆவது ‘தொடக்க ஆண்டு’ (Charter Day) விழா, திருகோணமலையில் திங்கட்கிழமை(08) இடம்பெற்றது. திருகோணமலை லங்கா ஐஓசியின் மூத்த துணைத் தலைவர் தேபன்ஜன் முகர்ஜி பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந்நிகழ்வில், ரோட்டறி மாவட்ட செயலாளர் குமார் சுந்தரராஜா சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். ரோட்டறிக்கழக தலைவர் நா. கிட்னதாஸ் வரவேற்புரை நிகழ்த்தினர். (கிண்ணியா செய்தியாளர்)

# முச்சக்கரவண்டியில் மரை இறைச்சி கடத்தியவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, கரடியனாறு பிரதேசத்திலிருந்து மட்டக்களப்பு நகருக்குள் சட்டவிரோதமாக முச்சக்கரவண்டி ஒன்றில் மரை இறைச்சி கடத்திச் சென்ற ஒருவரை திங்கட்கிழமை (08) மாலை வலையிறவு பாலத்தில் வைத்து கைது செய்துள்ளதுடன் 30 கிலோ மரை இறைச்சியை மீட்டுள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து, தலைமையகப் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் கஜநாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் சம்பவதினம் மாலை 6 மணியளவில் வலையிறவு பாலத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது நகரை நோக்கி வந்த முச்சக்கரவண்டியை நிறுத்தி சோதனையிட்டபோது அதிலிருந்து 30 கிலோ மரை இறைச்சி மீட்கப்பட்டதுடன் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டியையும் கைப்பற்றினர். மேலும் சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார். இதன்போது கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



புவிச்சரிதவியல் சுரங்கப்பணியகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பணியகத்தின் செயற்பாடுகள் தொடர்பான தெளிவூட்டல் செயலமர்வு செவ்வாய்க்கிழமை(09) திருகோணமலை மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன் போது கலந்து கொண்ட பாதுகாப்பு உயரதிகாரிகளைக் காணலாம். (கந்தளாய் செய்தியாளர்)

# மூடப்பட்ட சதொச கிளையை மீளத்திறக்குக

## ஐ.தே.க.நிந்தவூர் மத்திய கிளை வேண்டுகோள்

(எருவில் செய்தியாளர்)

நிந்தவூரில் பதினைந்து வருடகாலமாக இயங்கிய சதொச கிளை கடந்த கோட்டாபய அரசாங்கத்தினால் மூடப்பட்டது. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே குறித்த கிளையை மீளவும் திறந்து மக்களுக்குப் பயனளிக்க ஆவன செய்யுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நிந்தவூர் மத்திய கிளை கோரிக்கை விடுத்துள்ளது.

வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நிந்தவூர் மத்திய கிளை அனுப்பி வைத்துள்ள மகஜரிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நிந்தவூர் மத்திய கிளைத் தலைவர் ஏ.எல்.ஆதம்பாவா, செயலாளர் யூ.ஆதம் கனி ஆகியோர் இணைந்து கையொப்பமிட்டு இந்த மகஜரை அனுப்பி வைத்துள்ளனர்.

''அம்பாறை மாவட்டத்தில் மிக முக்கிய பிரதேசமான நிந்தவூரில் சுமார் பதினைந்து வருடகாலமாக இயங்கி வந்த லங்கா சதொச கிளை கடந்த கோட்டாபய ராஜபக்ஷ அரசு காலத்தில் நியாயமான காரணங்களின்றி அரசியல் பழிவாங்கலாக இழுத்து மூடப்பட்டது. நிந்தவூர் பிரதேச மக்கள் மட்டுமன்றி அயல் பிரதேச பாமர மக்களும் பயன் பெற்று வந்த இந்த சதொச கிளை மூடப்பட்டமை இன்றைய காலகட்டத்தில் பெரும் பாதிப்பாகவே அமைந்துள்ளது.

பொருளாதார நெருக்கடி மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு போன்ற பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கும் பிரதேச மக்கள் தமது நாளாந்த தேவையான அத்தியாவசியப் பொருட்களை சதொச கிளைகள் மூலமே பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் இருந்து வந்தது. இன்றைய நெருக்கடி நிலையில் அத்தியாவசியப் பொருட்களுக்கு அடிக்கடி விலைக்குறைப்பு செய்யும் அரசு, லங்கா சதொச கிளைகள் மூலம் விலைக்குறைப்பு செய்யப்பட்ட பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாமெனவும் அறிவுறுத்தி வருகின்றது.

எனினும் 15 வருடகாலமாக இயங்கிவந்த லங்கா சதொசவின் நிந்தவூர்க்கிளை மூடப்பட்டதால் பிரதேச நுகர்வோரான நிந்தவூர் மற்றும் அயல் பிரதேச மக்கள் குறித்த நிவாரணங்களை அனுபவிக்க முடியாத துரதிர்ஷ்ட நிலையிலுள்ளனர். அத்துடன் வெளிச்சந்தையில் அதிக விலையிலேயே அத்தியாவசியப் பொருட்கள் உட்பட ஏனைய தேவைகளுக்குரிய பொருட்களையும் பெற்றுக்கொள்ள வேண்டிய அவலம் நீடித்து வருகின்றது. எனவே, இன்றைய நிலையில் மக்களின் நிலைமை உணர்ந்தும், பிரதேச மக்களின் நலன் கருதியும் 15 வருடங்கள் இயங்கி பழிவாங்கலாக இழுத்து மூடப்பட்ட லங்கா சதொசவின் நிந்தவூர்க்கிளையை மீளவும் திறக்க தாமதமின்றி ஆவன செய்யுமாறு வினயமாகக் கோருகின்றோம்'' எனவும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயணிகள் தரிப்பிடத்தை மீளமைத்து தர கோரிக்கை



(அக்கரைப்பற்று செய்தியாளர்)

அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியில் தொழில்நுட்ப கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள பயணிகள் தரிப்பிடம் பல வருடங்களாக கூரை உடைந்த நிலையில் காணப்படுகின்றது.

கடும் வெப்பமான காலநிலை மற்றும் மழை காலங்களில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் பொது மக்களும் பயணிகள் தரிப்பிடத்தில் தரித்து நின்று பஸ்களில் பயணிக்க முடியாத நிலையே காணப்படுகின்றது.

எனவே இதற்குப் பொறுப்பானவர்கள் உடனடியாக மீளமைத்து தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# குடும்பநல உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு



(மூதூர் செய்தியாளர்)

சர்வதேச குடும்பநல உத்தியோகத்தர் தினத்தை முன்னிட்டு மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கடமையுணர்வோடு செயற்படும் 22 குடும்பநல உத்தியோகத்தர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு மூதூர், கட்டைபறிச்சான் கிராமிய சுகாதார நிலையத்தில் செவ்வாய்க்கிழமை(09) காலை இடம்பெற்றது.

கட்டைபறிச்சான் பொதுமக்கள் மற்றும் அன்னையர் ஆதரவுக்குழு ஆகியன இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இந்நிகழ்வில் குடும்பநல உத்தியோகத்தர்கள் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி, உதவி சுகாதார வைத்திய அதிகாரி உள்ளிட்டோரின் சேவையை பாராட்டி அவர்களும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி எம்.பீ.எம்.ஹில்மி முதன்மை அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

ஏனைய அதிதிகளாக மூதூர் உதவி சுகாதார வைத்திய அதிகாரி அஞ்சலி, மூதூர் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எம்.எம்.அரூஸ், கட்டைபறிச்சான் கிராம உத்தியோகத்தர், கட்டைபறிச்சான் கிராம சமூக அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருது முன்பள்ளி மாணவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கல் ஆரம்பம்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் முன்பள்ளி மாணவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது 13ஆம் பிரிவில் ஏ.ஆர்.எம்.முன்பள்ளி பாடசாலை மாணவர்கள் 145பேருக்கு தொடர்ச்சியாக 02 மாதங்களுக்கு போஷாக்கு உணவு வழங்கும் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபரின் நெறிப்படுத்தலில் சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.ஏ.நஜீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மேலும் உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிக்கா, கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.றிபாயா, கருத்திட்ட முகாமையாளர் றியாத் ஏ. மஜீத், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.காலிதீன், குடும்ப நல உத்தியோகத்தர்களான வி.நலாஜினி, ஏ.ஆர்.சாஜிதா பர்வின், மாணவர்களின் பெற்றோர், சமுர்த்தி சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



வடக்கில் விகாரைகள் சட்டவிரோதம்
எனில் தெற்கில் உள்ள இந்து
ஆலயங்களும் சட்ட விரோதமானதாம்
எண்டு அந்த சண்டியன் எம்.பி.
சரத்வீரசிங்க சொன்னவன் எலுவா...?
அடே புத்தா தெற்கில தமிழ் சனம்
அத்துமீறி குடியேறி உங்களப்போல
கோயில்கள கட்டல்லடா
பொடியா! உன்னப்போல இனவாத
சிங்களவன்தாண்டா வடக்கு கிழக்கில
சிங்கள சனம் அறவே இல்லாத வந்தான்
வரத்தான் படைகள கூப்புட்டுவைச்சி
எங்கட நிலத்த கபளீகரம் செய்ய புத்தர்
சிலைகளை இனவாத சின்னமாகவும்
விகாரைகளை சிங்கள அடையாளமாகவும்
காட்டிறத்துக்காக மேற்கொள்ளிற
சதிடாம்பி... இது புரியாம உளற
வேண்டாம் மல்லி...!

# ‘போதைப்பொருள் பாவனை ஒழிப்பு’ மகளிர் செயலமர்வு சாய்ந்தமருதில்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்ததாக ‘போதைப்பொருள் பாவனை ஒழிப்பு’ எனும் தொனிப்பொருளில் மகளிர் செயலமர்வு சாய்ந்தமருது - 04ஆம் பிரிவு பெண்களுக்கான அறிவூட்டல் நிகழ்வு சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக்கின் அறிவுறுத்தலுக்கமைவாக, சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபரின் ஏற்பாட்டில் சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.எம்.நஜீமின் நெறிப்படுத்தலில் இச்செயலமர்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தின் நிர்வாகப் பிரிவுக்குப் பொறுப்பான உப பொலிஸ் பரிசோதகர் கே.எஸ்.மேகவர்ண, போதைப்பொருள் பாவனை ஒழிப்புக்கு பொறுப்பான பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.எம்.றவூப், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.நளீம் கலந்து கொண்டனர். வளவாளராக கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் என்.எம்.நௌசாத் கலந்து கொண்டு போதைப்பொருள் பாவனையினால் சமூகத்துக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக உரையாற்றினார்.

இந்நிகழ்வில் சமூக மட்ட அமைப்புகளின் தலைவர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# களுவாஞ்சிக்குடியில் மனிதநேய செயற்பாடுகள் முன்னெடுப்பு



(கல்லடி செய்தியாளர்)

1998ஆம் ஆண்டு பிரித்தானியாவில் வாழும் களுவாஞ்சிக்குடி மக்களால் ஏற்படுத்தப்பட்ட களுவாஞ்சிக்குடி நலன்புரிச் சங்கம் பிரித்தானியா அமைப்பு அதன் வெள்ளிவிழா ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில், களுவாஞ்சிக்குடியில் இயங்கும் ஆறு முன்பள்ளிகளுக்கு திங்கட்கிழமை (08) அக்குழுவின் பிரதிநிதிகள் களவிஜயம் மேற்கொண்டு தேவைகளைக் கேட்டறிந்தனர். இவர்களின் தேவைகள் விரைவில் நிறைவேற்றித் தரப்படும் என்ற உறுதி மொழியை அவர்கள் இதன்போது வழங்கினர்.

இச்சங்கத்தினர் கடந்த 25 வருடங்களில் தமிழர் தாயகப் பகுதிகளில் கல்வி மேம்பாடு, விளையாட்டு, சமய, சமூகநல அபிவிருத்தி போன்றவற்றை மேம்படுத்த பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியிருந்தனர். இதேவேளை, அண்மையில் இச்சங்கத்தினருக் கான புதிய உறுப்பினர் தெரிவு இடம்பெற்றது. அதனடிப்படையில் தலைவராக சங்கரலிங்கம் அனோஜனும் செயலாளராக மாணிக்கம் சந்திரசேகரமும் பொருளாளராக ரமணி ஜெயபாலனும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களோடு 12 பேர் கொண்ட செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

# மின்னல் தாக்கி இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(மீராவோடை செய்தியாளர்)

வயலில் வேலை செய்துகொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த சம்பவமொன்று செவ்வாய்க்கிழமை (09) இடம்பெற்றுள்ளது. பொலன்னறுவை - சுங்காவில், நெலும்புர எனும் பகுதியிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உழவு இயந்திரத்தில் வயல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மின்னல் தாக்கியதில் இவர் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் 30 வயதுடைய இர்பான் என்பவராவார். அம்பாறை - இறக்காமம் பகுதியை பிறப்பிடமாகக் கொண்ட இவர், சுங்காவில் பகுதியில் திருமணம் முடித்து வாழ்ந்து வந்துள்ளார்.

உயிரிழந்த குறித்த நபரின் சடலம் புலஸ்திகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் நேற்று புதன்கிழமை (10) உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# பொது நூலகங்கள் கணினி மயம்

(கிண்ணியா செய்தியாளர்)

UNDP நிறுவனமும் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையும் இணைந்து கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட முக்கிய பொது நூலகங்களை கணினி மயமாக்கும் செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இதற்கான பயிற்சி திங்கட்கிழமை(08) முதல் புதன்கிழமை (10) வரை திருகோணமலை முகாமைத்துவப் பயிற்சி பிரிவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 45 வரையான நூலகர்கள் மற்றும் நூலக உதவியாளர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில் தேசிய நூலக ஆவண வாக்கல் சேவைகள் சபையின் தலைவர் பேராசிரியர் நந்த தர்மரத்தின, பணிப்பாளர் வடுகே, உதவிப்பணிப்பாளர் அரவிந்த, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மூவருக்கு விளக்கமறியல்

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் மூவர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித் தனர் .

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்குச் சென்று சந்தேக நபர்களை கைது செய்து செவ்வாய்க்கிழமை (09) அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் ஆஜர்படுத் தினர்.

இதற்கிணங்க சந்தேக நபர்களை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

உலக செய்திகள்

# இம்ரான்கானின் கைதால் பற்றியெரியும் பாகிஸ்தான்

- ஒருவர் பலி; 15 பேர் படுகாயம்
- இணையச் சேவைகள் முடக்கம்
- பிரித்தானியா, கனடாவிலும் ஆர்ப்பாட்டம்









பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நாடுமுழுவதும் வன்முறை வெடித்துள்ளது.

இம்ரானின் கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்லாமாபாத், கராச்சி, பெஷாவர், லாகூர் உள்ளிட்ட பல்வேறு மாகாணங்களில் அவரது ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபடத் தொடங்கினர். வீதியில் சென்ற பொலிஸ் வாகனங்களுக்கு தீ வைத்ததுடன், இராணுவ தலைமை உள்ளிட்ட அலுவலகங்களில் புகுந்து அங்குள்ள பொருட்களையும் சூறையாடியுள்ளனர்.

நாடு முழுவதும் அசாதாரண சூழல் நிலவி வருவதால் பல்வேறு மாகாணங்களில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இணைய சேவைகள் முடக்கப்பட்டுள்ளன. மேலும், முகநூல், டுவிட்டர், வட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்கள் பயன்படுத்த முடியாதவாறு முடக்கியுள்ளனர்.

இதன்போது ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 15இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். வன்முறைகளை கட்டுப்படுத்த இணையச் சேவைகள் முடக்கப்பட்டுள்ளன.

மேலும், பிரித்தானியா, கனடா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் இம்ரானின் ஆதரவாளர்கள் பாகிஸ்தான் தூதரக அலுவலகங்களுக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இதற்கிடையே, கைதான இம்ரான் நேற்று (10) காலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

ரியல் எஸ்டேட் நிறுவனம் ஒன்று, பாகிஸ்தான் ரூபாவில் 530 மில்லியன் மதிப்பிலான இடத்தை முன்னாள் பிரதமர் இம்ரான்கானுக்கு சொந்தமான அல்காதிர் அறக்கட்டளைக்கு வழங்கியதாக அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில் ஆஜராகிவிட்டு வெளியே வந்த இம்ரான்கானை அந்நாட்டு துணை இராணுவப் படையினர் கைது செய்து இழுத்துச் சென்றனர்.

**ஒருவர் உயிரிழப்பு; 15 பேர் படுகாயம்**

இம்ரான்கான் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து அவரது ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். பலூசிஸ்தான் மாகாணத்தின் தலைநகரான குவெட்டாவில் இராணுவத்துடன் நடந்த மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கராச்சி, பெஷாவர், ராவல்பிண்டி மற்றும் லாகூரில் நடந்த வன்முறைச் சம்பவங்களில் 15 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்ரான்கான் ஆதரவாளர்களை கண்ணீர்ப்புகை வீசி பொலிஸார் கலைத்துள்ளனர்.

**இணைய சேவைகள் துண்டிப்பு**

போராட்டங்கள் பரவாமல் தடுக்க சமூக ஊடகங்களின் பயன்பாடு நிறுத்தப்பட்டிருப்பதுடன், இஸ்லாமாபாத்தில் இணைய சேவை துண்டிக்கப்பட்டுள்ளது. லாகூரில் இராணுவ உயர் அதிகாரி ஒருவரின் வீட்டினை போராட்டக்காரர்கள் அடித்து நொறுக்கினர். முக்கிய வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் எரிக்கப்பட்டன.

முன்னதாக, இம்ரான் கான் வெளியிட்ட முன்பதிவு செய்யப்பட்ட வீடியோவில் தான் சிறையில் அடைக்கப்படலாம் என்றும், பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்காமல் போய்விடலாம் என்றும் தெரிவித்திருந்தார்.

**நாடு முழுவதும் வன்முறை வெடிப்பு**

இஸ்லாமாபாத் நீதிமன்றத்தில் ஆஜராக வந்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை துணை இராணுவ ரேஞ்சர்கள் அதிரடியாக கைது செய்த சம்பவம் அந்நாட்டு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும் பாகிஸ்தான் தெஹ்ரிக் இ இன்சாப் (பிடிஐ) கட்சித் தலைவருமான இம்ரான் கான், கடந்த ஆண்டு ஏப்ரலில் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர், முன்கூட்டியே தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். பல்வேறு பொதுக்கூட்டங்களை தொடர்ச்சியாக நடத்தி வருகிறார்.

கடந்த ஆண்டு நவம்பரில் கண்டன பேரணியின்போது துப்பாக்கிச் சூட்டில் உயிர் பிழைத்தார். இதனால் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் அரசுக்கு மிகவும் நெருக்கடி தரும் இம்ரான் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இதுதொடர்பாக சமீபகாலமாக இம்ரான் கைது செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக அடிக்கடி கூறப்பட்டு வந்தநிலையில், ஊழல் வழக்கொன்றில் ஆஜராவதற்காக இம்ரான்கான் நேற்றுமுன்தினம் (09) காலை லாகூரிலிருந்து இஸ்லாமாபாத்துக்கு சென்றுள்ளார். இஸ்லாமாபாத் நீதிமன்றத்துக்கு அவர் வந்த சிறிது நேரத்தில், துணை இராணுவப்படை ரேஞ்சர்கள் ஏராளமானோர் அதிரடியாக நீதிமன்றத்தில் நுழைந்தனர்.

அங்கு கடும் கெடுபிடிகளுடன் இம்ரான் கானை அவர்கள் கைது செய்து வாகனத்தில் ஏற்றி இரகசிய இடத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். உள்துறை அமைச்சகத்தின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் செயற்படும் துணை இராணுவ ரேஞ்சர்கள், இம்ரானின் சட்டை கொலரை பிடித்து தரதரவென இழுத்துச் சென்று வாகனத்தில் ஏற்றிய வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின.

2019ஆம் ஆண்டு அல்-காதிர் பல்கலைக்கழகத்தை அமைப்பது தொடர்பான அல் -காதிர் அறக்கட்டளையின் ஊழல் வழக்கில் இம்ரான் கான் கைது செய்யப்பட்டுள்ளதாக தேசிய பொறுப்புகூறல் அமைப்பும் (என்ஏபி) இஸ்லாமாபாத் பொலிஸாரும் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர். பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐஎஸ்ஐயின் உயர் அதிகாரி ஒருவர் தன்னை கொல்ல சதித்திட்டம் தீட்டுவதாக இம்ரான் கூறியிருந்த நிலையில், அடிப்படை ஆதாரமில்லாமல் குற்றச்சாட்டுகளை சுமத்தக்கூடாது என இராணுவம் பதிலளித்த அடுத்த நாளே இந்த கைது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, ராவல்பிண்டியிலுள்ள என்ஏபி அலுவலகத்துக்கு இம்ரான் கான் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

போராட்டக்காரர்கள் ராவல்பிண்டி உள்ளிட்ட இராணுவ தலைமை அலுவலகங்களிலும் புகுந்து பொருட்களை சூறையாடியுள்ளனர். இதன் காரணமாக பாகிஸ்தானில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

---

TATA IPL

**இன்றைய போட்டி**

போட்டி இல - 56

கொல்கத்தா எதிர் ராஜஸ்தான்

நேரம் - இரவு 7.30

இடம் - கொல்கத்தா

# ஆசிய கிண்ணத்தைப் புறக்கணிப்போம் – பாக். அணி மிரட்டல்

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி செப்டெம்பர் மாதம் பாகிஸ்தானில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த நிலையில், இந்தப் போட்டியை பாகிஸ்தானில் நடத்தினால் அதில் பங்கேற்க மாட்டோம் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு நிறுவனம் (பி.சி.சி.ஐ.) அறிவித்துள்ளது.

இதை தொடர்ந்து இந்தியாவில் நடைபெறும் உலகக் கிண்ணத் தொடரை புறக்கணிக்கப் போவதாக பாகிஸ்தான் பதிலடி கொடுத்தது. இது குறித்து ஆசிய கிரிக்கெட் கவுன்சில் நிர்வாகிகள் ஆலோசனை நடத்திய நிலையில், ஆசிய கிண்ணத்தை பொதுவான இடமான இலங்கை அல்லது ஐக்கிய அரபு எமிரேட்சில் நடத்த முடிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில் ஆசிய கிண்ணத்தை இலங்கையில் நடத்துவது என்று ஆசிய கவுன்சில் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கு பாகிஸ்தான் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. ஆசிய கிண்ணம் ஐக்கிய அரபு எமிரேட்சில் தான் நடைபெறும் என்று பாகிஸ்தான் எதிர்பார்த்தது.

ஆனால் இலங்கையில் நடைபெறுவதை அந்த நாடு ஏற்றுக் கொள்ளவில்லை. இதை தொடர்ந்து ஆசிய கிண்ணத்தை புறக்கணிக்கப்போவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மிரட்டல் விடுத்துள்ளது.

# ஆசியக்கிண்ணம் இலங்கையில்?

இந்தாண்டு செப்டெம்பரில் நடைபெறவுள்ள ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடரை பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு மாற்றுவது தொடர்பில் ஆராயப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது. பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, இந்திய வீரர்களை பாகிஸ்தானுக்கு அனுப்புவதற்கு இந்திய அரசாங்கம் அனுமதி வழங்காமை போன்ற விடயங்கள் இதில் தாக்கம் செலுத்தியுள்ளன.

இந்தியா இந்தப் போட்டிகளை டுபாயில் விளையாடுவதற்கு எதிர்பார்த்திருந்ததாக தகவல்கள் குறிப்பிடுகின்றன. அதேபோன்று ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் பாகிஸ்தானுக்கு வெளியே போட்டியை நடத்துவதற்கான யோசனையை ஆதரித்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்த தீர்மானம் இந்த மாத இறுதியில் எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை நடத்துவதற்கு ஓமான் முன்வந்தபோதிலும் நிபந்தனைகளுக்கு அமைய தற்போது இலங்கை ஒரு விருப்பமாக கருதப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மெஸ்ஸி சவூதி அரேபியாவில் களமிறங்குவது உறுதி!





உலக சம்பியனான லியோனல் மெஸ்ஸி பிரான்ஸின் பாரிஸ் செயின்ட் ஜெர்மனை விட்டு வெளியேறி சவூதி அரேபியாவை தளமாகக் கொண்ட கிளப்பில் சேர உள்ளார் என்று ஒரு அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது. பி.எஸ்.ஜி கிளப்புடன் மெஸ்ஸியின் தற்போதைய ஒப்பந்தம் ஜூன் மாத இறுதியில் முடிவடைகிறது. மெஸ்ஸி சவூதி அரேபியாவில் சுற்றுலாத் தூதுவராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, ஜனவரியில் ஜாம்பவான் கிறிஸ்டியானோ ரொனால்டோ சவூதி அரேபியாவின் ப்ரோ லீக் கிளப்பான அல் நஸ்ருடன் 400 மில்லியன் யூரோ எனும் பாரிய ஒப்பந்தத்தில் இணைந்தார். ஃபோர்ப்ஸ் படி உலகின் அதிக சம்பளம் வாங்கும் விளையாட்டு வீரர் ஆவார்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# 29இல் இலங்கை வரும் ஆப்கான் அணி

ஆப்கானிஸ்தான் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டிகளில் ஆடவுள்ள நிலையில் அதற்கான போட்டி அட்டவணை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் அணி இம்மாதம் 29ஆம் திகதி இலங்கையை வந்தடையவுள்ளதுடன், இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் போட்டி ஜூன் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதனைத்தொடர்ந்து ஜூன் 4ஆம் திகதி இரண்டாவது ஒருநாள் போட்டியும் 7ஆம் திகதி மூன்றாவது ஒருநாள் போட்டியும் நடைபெறவுள்ளன. குறித்த இந்த மூன்று போட்டிகளும் ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளன.



**அட்டாளைச்சேனை கல்விக் கோட்டமட்ட 16 வயதுப் பிரிவுக்கான உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை அணியினரை 1:0 என்ற கோல் அடிப்படையில் அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று சம்பியனாகி அக்கரைப்பற்று வலய மட்டப் போட்டிக்கு தெரிவானது. (படம் - அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)**

# சம்பியனான கொழும்பு ஸாஹிரா கல்லூரி



***(அஷ்ரப் ஏ சமத்)***

றினோன் தலைவர் கிண்ணத்துக்கான அகில இலங்கை ரீதியில் உள்ள பாடசாலைகளுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் கொழும்பு ஹமீட் அல் ஹூஸைனி கல்லூரியை 6-0 என்ற கோல்கள் கணக்கில் இலகுவாக வீழ்த்திய கொழும்பு ஸாஹிரா கல்லூரி 18 வயதின்கீழ் பிரிவு 1 பாடசாலை அணிகளுக்கு இடையிலான சம்பியன்களாக முடிசூடிக்கொண்டது.

இப் போட்டியின் இறுதி சுற்றுப் போட்டி பெண்கள் பிரிவு, டிவிசன் 1, டிவிசன் 2 என மூன்று சுற்றுப் போட்டி நிகழ்வுகள் நடைபெற்றன. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சர் ரொஸான் ரணசிங்க, றினோன் அகடமி தலைவர் சிறிதரன் மற்றும் ரொபட் பெரேரா ஆகியோர் உட்பட கழகத்தின் உறுப்பினர்களும் கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணத்தினை வழங்கி வைத்தனர்.



**பொத்துவில் கல்விக் கோட்டமட்ட கிரிக்கெட், எல்லை, வலைப்பந்து, உதைபந்து போன்ற போட்டிகளில் பல வயதுப் பிரிவுகளில் பொத்துவில் அல் - கலாம் மகா வித்தியாலய அணியினர் வெற்றி பெற்று அக்கரைப்பற்று வலய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டனர்.**

**(படம் - அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7